2021 - இதழ் 08

இலவசம்

ஆவணி - 2021

# உள்ளான மனிதன்

## மென்பிரதி

GRACE TABERNACLE
APOSTOLIC CHURCH

# உள்ளான மனிதன்

மாதாந்தர சஞ்சிகை - இலவசம் 2021 - இதழ் 08

## ஆண்டவர் இயேசு சொன்னார்:

**உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக; தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள், என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள்.**

உள்ளூர் சபையின் தொடர்புகளுக்கு

நீங்கள் தற்போது கிறிஸ்தவ **ஆவிக்குரிய** ஐக்கியமொன்றிலே இணைந்திருந்தால், அங்கே கருத்தோடு தேவனை சேவித்து, உங்கள் அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் உறுதிப்படுத்தி, இயேசு கிறிஸ்துவுக்குள், உங்களைக் குறித்ததான பிதாவின் சித்தத்தை நிறைவேற்றுங்கள்.

# இந்த இதழில்...

## 2021 - இதழ் 08


பக்கம் **4**

### கிறிஸ்துவினுடையவர்கள்

தேவனோ இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவராய் நம்மில் அன்புகூர்ந்த தம்முடைய மிகுந்த அன்பினாலே, அக்கிரமங்களில் மரித்தவர்களாயிருந்த நம்மைக் கிறிஸ்துவுடனேகூட உயிர்ப்பித்தார்

பக்கம் **6**

### அணையாத தீபம்.

இவ்வண்ணமாக மனிதர்கள் தங்கள் வாழ்க்கையிலே மற்றய மனிதர்களின் "கவர்சியான வெளித் தோற்றங்களைக்கண்டு அல்லது அவர்கள் பேச்சு வல்லமையைக் கேட்டு" தங்கள் வாழ்விலே முக்கியமான முடிவுகளை எடுத்துக் கொள்கின்றார்கள்.

பக்கம் **14**

### பிரசங்கக் குறிப்புகள்

நான் இப்போது அல்ல, வயது சென்ற காலத்திலே, தேவனே, தேவனே என்று அவரை கூப்பிட்டு அவருடைய சித்தத்தை செய்வேன் என்று சிலர் கூறிக் கொள்ளுவதுண்டு.

பக்கம் **16**

### புதிய நாளுக்குள்...

கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்.


**கிரேஸ் (ற்)ரபனக்கல்**


**PLACE OF WORSHIP**
210 Silver Star Blvd., Unit #807
Scarborough, ON M1V 5J9, Canada

**MAILING ADDRESS**
7700 Markham Road, P.O. Box 3052
Markham, ON L3S 4T1, Canada

☎ 416.613.2909

gtachurch.ca/contact

# புதிய நாளுக்குள்...

அனுதின தியானக் குறிப்புக்கள்

## தலைப்பு அகராதி 16ம் பக்கத்திலிருந்து...


**மனக்குழப்பமான, சோர்வான நேரங்களில்**

... ஆவணி 2, 11, 12, 14, 15, 22, 23, 24, 29, 31

**போராட்டங்களில், பிசாசின் தந்திரங்களில் வெற்றி**

... ஆவணி 2, 3, 9, 11, 12, 13, 15, 17, 19, 22, 23, 28, 29, 30, 31

**பாவத்திலிருந்து விடுதலையடையும் வழி உண்டு**

... ஆவணி 2, 3, 4, 6, 11, 15, 16, 17, 28, 29, 30, 31

**முக்கிய தீர்மானங்களை எடுக்கும் முன்**

... ஆவணி 1, 5, 6, 9, 12, 14, 15, 22, 25, 26, 28, 29, 30, 31

**சமரசமான வாழ்க்கை வேண்டாம்**

... ஆவணி 1, 3, 4, 5, 6, 12, 13, 18, 21, 23, 27, 27, 28, 29, 31

**தெய்வீக ஆசீர்வாதங்கள்**

... ஆவணி 6, 7, 9, 13

**தேவனுடைய சித்தம் நிறைவேறட்டும்**

... ஆவணி 3, 5, 6, 15, 16, 21, 22, 23, 25, 26, 27, 29

**தேவனுக்குப் பிரியமான வாழ்க்கை**

... ஆவணி 3, 6, 7, 8, 9, 13, 16, 18, 19, 20, 22, 25, 26, 27

**சமாதானமும் அமரிக்கையுமான வாழ்க்கை உண்டு**

... ஆவணி 6, 7, 20

**பொறுமையோடு காத்திருங்கள்**

... ஆவணி 14, 15, 17, 23, 24

**தேவ நீதி வெளிப்படும்**

... ஆவணி 4, 5, 23, 24,

**திவ்விய சுபாவங்கள் வெளிப்படட்டும்**

... ஆவணி 10, 11, 16, 17, 19, 23, 30

**வாழ்வு தரும் திருவசனம், ஐக்கியத்தின் மேன்மை**

... ஆவணி 1, 8, 11, 12, 14, 18, 20, 21, 25, 26, 29, 30, 31

**மேட்டிமை, வன்மம், பகை தலைதூக்கும் போது...**

... ஆவணி 10, 11, 17, 19, 29, 30

# கிறிஸ்துவினுடையவர்கள்

*போதகர் ரஞ்சிற் கொன்ஸ்ரன்ரைன்*

“பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரைத் தரிசிப்பதில்லையே.” என்று பரிசுத்த வேதாகமத்தில் வாசிக்கிறோம். தேவன் பரிசுத்தராயிருக்கிறார். ஆகையால் பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரைத் தரிசிப்பதில்லை. உங்கள் தேவனும் கர்த்தருமாகிய நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள் என்று தம்முடைய ஜனத்திற்கு தேவன் பலமுறை கூறியுள்ளதைக் காண்கிறோம்.

ஒரு தேவபிள்ளையின் வாழ்வில் பரிசுத்தம் இன்றியமையாததாயுள்ளது, அதற்கு மாற்றீடு எதுவுமேயில்லை.

பாவமில்லாதவன் ஒருவனுமில்லை. எல்லோரும் பாவம் செய்து தேவமகிமையற்றவர்களானார்கள்.
நாமோ:

- அக்கிரமங்களினாலும் பாவங்களினாலும் மரித்தவர்களாயிருந்தோம்.
- இவ்வுலக வழக்கத்திற்கேற்றபடியாக நடந்துகொண்டோம்.
- கீழ்;ப்படியாமையின் பிள்ளைகளிடத்தில் இப்பொழுது கிரியைசெய்கிற ஆகாயத்து அதிகாரப் பிரபுவாகிய (பிசாசின்) ஆவிக்கேற்றபடியாகவும் நடந்துகொண்டோம்.
- நமது மாம்ச இச்சையின்படியே நாம் நடந்துகொண்டோம்.
- நமது மாம்சமும் மனதும் விரும்பினவைகளைச் செய்தோம்.
- சுபாவத்தினாலே, மற்றவர்களைப்போலக் கோபாக்கினையின் பிள்ளைகளாயிருந்தோம்.

தேவனோ இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவராய் நம்மில் அன்புகூர்ந்த தம்முடையமிகுந்த அன்பினாலே, அக்கிரமங்களில் மரித்தவர்களாயிருந்த நம்மைக் கிறிஸ்துவுடனேகூட உயிர்ப்பித்தார். (எபே 2:4-5)

தேவனுடைய ஐசுவரியத்திற்கு அளவேது. யாராகிலும் அதற்கு ஓர் எல்லையைக் குறிக்க முடியுமோ?

- ❖ தேவன் இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவராய் நம்மில் அன்புகூர்ந்தார். அந்த இரக்கத்திற்கும் அன்பிற்கும் அளவேது? எல்லையேது?
- ❖ அந்த மிகுந்த அன்பினாலே, அக்கிரமங்களில் மரித்தவர்களாயிருந்த நம்மைக் கிறிஸ்துவுடனேகூட உயிர்ப்பித்தார். இந்த மேன்மை எத்தனை பெரியது.

தேவன் நம்மைத் தமது குமாரனோடு உயிர்ப்பித்து அவரோடு கூட இணைத்தது, எமக்கு எத்தகைய பாக்கியமாயுள்ளது.

- தேவகுமாரனோடு கூட நம்மை உயிர்ப்பித்தார். எதற்காக?
  நாம் தேவபிள்ளைகளாய் வாழ்வதற்கு.
- அழிவில்லா நித்தியமான வாழ்வைத்தந்தார். எதற்காக?
  நாம் தம்மோடு கூட பரலோகத்தில் வாழ்வதற்காவே.

இயேசுகிறிஸ்து, சிலுவையில் எமக்காக சிந்தின இரத்தத்தினால் எம்மைக் கழுவி சுத்திகரித்து தமக்கென்று எம்மை பரிசுத்தமாக்கினார். ஆம், நாம் அவருக்கென்று பிரித்தெடுக்கப்பட்டு அவருக்கென்று அவருடையவர்களாய் பரிசுத்தமாக்கப்பட்டோம். இப்போதோ நாம் அவருடைய இரத்தத்தினால் கிரயத்துக்குக்கொள்ளப்பட்டோம். நாம் கிறிஸ்துவினுடையவர்கள்.

நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும் படிக்குத் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான அசாரியக்கூட்ட மாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக் கிறீர்கள் என்று பரிசுத்த வேதாகமத்திலே காண்கிறோம்.

பிரியமான சகோதரனே சகோதரியே,

கிறிஸ்துவினுடையவர்கள் தேவபிரியராயுள்ளார்கள். எல்லையில்லா தமது இரக்கத்தினால் உன்னில் அன்புகூரும் தேவன் உன்னை ஒருபோதும் மறவார். பர்வதங்கள் எருசலேமைச் சுற்றிலும் இருக்குமாப்போல், கர்த்தர் என்றென்றைக்கும் தம்முடைய ஜனத்தைச் சுற்றிலும் இருக்கிறார். அவரை நம்புபவர்களுக்கு அவர் கிருபை என்றுமுள்ளது.

கர்த்தரைத் தெய்வமாய்க்கொண்ட ஜனம் பாக்கியமுள்ளது.

எம்மோடு கூட ஜெபிக்க விரும்பினால் ஞாயிறு காலை 10:00 மணிக்கு நேரலையில் **www.gtachurch.ca/live** இணையதளத்தின் வழியாக தேவ ஆராதனையில் கலந்து கொள்ளும்படி உங்களை அழைக்கின்றேன்.


## கிருபையின் கூடாரம் அப்போஸ்தல சபை

**ரொரன்ரோ, கனடா ☎ 416.613.2909**

# அணையாத தீபம்

ஒரு சிறுமியானவள் தன்னுடைய பிறந்தன தினமன்று தனக்கு கிடைத்த பரிசுப்பொருளொன்றை திறந்து பார்ப்பதற்கு பரவசத்துடன் ஆவலாக இருந்தாள். அந்த பரிசுப்பொருளானது அழகான வெளியுறையினால் பொதியிடப்பட்டு, அதை சுற்றி சிவப்பு நாடாவினால் வாரிழைக்கப்பட்டிருந்தது. அதனுள்ளே என்ன இருக்கும் என்ற பெரும் எதிர்பார்ப்போடு, அவசரவசரமாக அந்த பரிசுப்பொருள் இருந்த பொதியை திறந்தாள். அந்தப் பொதியினுள் இருந்த பரிசுப் பொருளை பார்த்ததும், அவள் முகத்திலிருந்த பரவசம், ஏமாற்றமாக மாறியதை அவளுடைய பெற்றோர் கண்டார்கள். மிகவும் அழகாக பொதியிலிடப்பபட்ட பரிசுப்பொருளானது வெளியே அவள் கண்களுக்கு இன்பமாக இருந்தது ஆனால் அந்த அழகான பொதிக்குள் இருந்த பரிசுப் பொருள் அவள் மனதிற்கு பெரும் ஏமாற்றத்தைக் கொடுத்தது. இவ்வண்ணமாக மனிதர்கள் தங்கள் வாழ்க்கையிலே மற்றய மனிதர்களின் “கவர்ச்சியான வெளி தோற்றங்களைக் கண்டு அல்லது அவர்கள் பேசும் இனிமையான வார்த்தைகளைக் கேட்டு” தங்கள் வாழ்விலே முக்கியமான முடிவுகளை எடுத்துக் கொள்கின்றார்கள். நாட்கள் கடந்து செல்லும் போது மற்றய மனிதர்கள் உண்மையிலே யார் என்று அறிந்து கொள்ளும் போது பெரும் ஏமாற்றமடைந்து கொள்கின்றார்கள். அழிந்து போகின்ற இந்த உலக பொருட்களினால் ஏமாற்றம் அடைந்தால் ஒருவேளை அதை திரும்பப் பெற்றுக் கொள்ளலாம். ஆனால் ஒரு மனிதன் தன் வாழ்நாட்களிலே தன் ஆத்துமாவிற்கு கேடு விளைவித்தால் அவன் நித்திய ஜீவனை இழந்து போவான். எனவே நித்திய ஜீவனைக் கொடுக்கும் தேவ வார்த்தைகளைக் நாம் இழந்து போகாதபடிக்கு மிகவும் விழிப்புள்ளவர்களாக இருக்க வேண்டும் (யோவான் 6:68, யோவான் 10:27-28).

இன்றைய உலகிலே “தியானம்” (Meditation, Devotion) என்ற வார்த்தையை மனிதர்கள் பரவலாக பேசிக் கொள்கின்றார்கள். இந்தத் தியானம் என்னும் வார்த்தையானது பலரைக் கவர்ந்து கொண்டிருக்கின்றது. தியானத்தின் வழியாக தேவனை தரிசிக்கலாம், மன ஆரோக்கியம் உண்டாகும், ஆன்மீக விடுதலை கிடைக்கும், உடல் ஆரோக்கியம் உண்டாகும், இராத்திரியிலே அமைதலாக தூங்கலாம் என்று பலரும் வெவ்வேறான எதிர்பாரப்போடு தங்கள் சிந்தையை அதற்கு ஒப்புக் கொடுக்கின்றார்கள். தியானத்தின் பலன்கள் மனிதனுக்கு நன்மையானது என்பதை அநேகர் ஏற்றுக் கொள்கின்ற போதிலும், மனிதர்கள் தங்கள் நம்பிக்கையின்படி பலவிதமாக பல நிலைகளிலே தியானம் செய்கின்றார்கள்.

- சிலர் குறிப்பிட்ட தேசத்திற்கும், விசேஷித்த இடங்களுக்கும் செல்கின்றார்கள்.
- வேறுசிலர் சிலர் குறிப்பிட்ட நபரிடத்திற்குச் சென்றும் தியானிக்கும் முறைமைகளை கற்றுக் கொள்கின்றார்கள்.
- இன்னும் சிலர் தாங்கள் இருக்கும் வீட்டில் அல்லது இடத்தில் அனுதினமும் தியானிக்கின்றார்கள்

இவைகளைக் குறித்து பரிசுத்த வேதாகமத்திலிருந்து சில உதாரணங்களை ஆராய்ந்து பார்ப்போம்.

நீங்கள் எருசலேமை விட்டுப் போகாமல் என்னிடத்தில் கேள்விப்பட்ட பிதாவின் வாக்குத்தத்தம் நிறைவேறக் காத்திருங்கள் என்று ஆண்டவர் இயேசு தம்முடைய சீஷர்களுக்கு கட்டளையிட்டார். அதன்படி அவர்கள் குறிபிட்ட இடத்திலே தரித்திருந்தார்கள். பெந்தெகொஸ்தே என்னும் நாள் வந்தபோது, அவர்களெல்லாரும் ஒருமனப்பட்டு ஓரிடத்திலே வந்திருந்தார்கள். அப்பொழுது பலத்த காற்று அடிக்கிற முழக்கம்போல, வானத்திலிருந்து சடிதியாய் ஒரு முழக்கமுண்டாகி, அவர்கள் உட்கார்ந்திருந்த வீடு முழுவதையும் நிரப்பிற்று. அல்லாமலும் அக்கினிமயமான நாவுகள்போலப் பிரிந்திருக்கும் நாவுகள் அவர்களுக்குக் காணப்பட்டு, அவர்கள் ஒவ்வொருவர்மேலும் வந்து அமர்ந்தது. (அப்போஸ்தலர் 1ம் 2ம் அதிகாரங்கள்)

சீரியா தேசத்து படைத் தளபதியாகிய நாகமான் தன் குஷ்டரோகம் நீங்கி குணமாகும்படி, எலிசா என்னும் தீர்க்கதரிசியை சந்திக்க இஸ்ரவேலுக்கு வந்தான். தேவனுடைய மனுஷன் வார்த்தையின்படியே யோர்தானில் ஏழு தரம் முழுகினபோது, அவன் மாம்சம் ஒரு சிறுபிள்ளையின் மாம்சத்தைப்போல மாறி, அவன் சுத்தமானான். (2 இராஜாக்கள் 5ம் அதிகாரம்)

மீதியான் தேசத்திலே, ஓரேப் என்னும் மலையிலே, கர்த்தருடைய தூதனானவர் ஒரு முட்செடியின் நடுவிலிருந்து உண்டான அக்கினிஜுவாலையிலே நின்று மோசே என்னும் மனிதனுக்கு தரிசனமானார். (யாத் 3:1-5)

கர்த்தருடைய மகிமை சீனாய்மலையின்மேல் தங்கியிருந்தது. மேகம் ஆறுநாள் அதை மூடியிருந்தது. ஏழாம் நாளில் அவர் மேகத்தின் நடுவிலிருந்து மோசேயைக் கூப்பிட்டார். மலையின் கொடுமுடியிலே கர்த்தருடைய மகிமையின் காட்சி இஸ்ரவேல் புத்திரருடைய கண்களுக்குப் பட்சிக்கிற அக்கினியைப்போல் இருந்தது. (யாத் 24:16-17)

சாலொமோன் ஆலயத்தின் கட்டுமானபணியை முடித்து, ஆலயத்தை பிரதிஷ்டை செய்து, ஜெபம்பண்ணி முடிக்கிறபோது, அக்கினி வானத்திலிருந்து இறங்கி, சர்வாங்க தகனபலியையும் மற்றப் பலிகளையும் பட்சித்தது. கர்த்தருடைய மகிமையும் ஆலயத்தை நிரப்பிற்று. கர்த்தருடைய மகிமை கர்த்தருடைய ஆலயத்தை நிரப்பினதினால், ஆசாரியர்கள் கர்த்தருடைய ஆலயத்துக்குள் பிரவேசிக்கக்கூடாதிருந்தது. (2 நாளா 7:1-2)

தன் கழுததைகளை தேடிச் சென்ற சவுல் என்னும் மனிதன், நல்ல விஷயங்களைஅறியும்படிக்கு தீர்க்கதரிசியாகிய சாமுவேலிடத்திற்கு சென்றான். சாமுவேல் சவுலுக்கு தேவ வார்த்தையை அறிவித்தார். (1 சாமு 9:19)

இயேசு பரிசுத்த ஆவியினாலே நிறைந்தவராய் யோர்தானை விட்டுத் திரும்பி, ஆவியானவராலே வனாந்தரத்திற்குக் கொண்டு போகப்பட்டார். (லூாக்கா 4:1)

அப்பொழுது, இயேசு அவர்களோடே கெத்செமனே என்னப்பட்ட இடத்திற்கு வந்து, சீஷர்களை நோக்கி: நான் அங்கே போய் ஜெபம்பண்ணுமளவும் நீங்கள் இங்கே உட்கார்ந்திருங்கள் என்று சொன்னார். (மத் 26:36)

இப்படியாக வேதத்திலே காணும் பாத்திரங்களில் பலர் குறிப்பிட்ட தேசங்களுக்கும், இடங்களுக்கும், நபர்களிடத்திற்கும் சென்றிருந்தார்கள். எனவே நாம் தேவனைத் தரிசிக்கும்படி தேசங்களுக்கும், இடங்களுக்கும்,

நபர்களினிடத்திற்கும் செல்வதில் தவறு ஏதும் உண்டா? மேற்கூறிய சம்பவங்களை பின்வரும் கூற்றுக்களோடு சிந்தித்துப் பாருங்கள்.

பெந்தகோஸ்தே என்னும் நாள் வந்தபோது, சீஷர்களில் ஏறக்குறைய 120 பேர் கூடியிருந்தார்கள். வானத்தின் கீழிருக்கிற சகல தேசத்தாரிலுமிரு ந்து வந்த தேவபக்தியுள்ள யூதர்கள் அப்பொழுது எருசலேமிலே வாசம் பண் ணினார்கள். ஆனால் ஏன் எருசலேமிலிருந்த நூற்றிருபது சீஷர்கள் மேல் மட்டும் பரிசுத்த ஆவியானவர் இறங்கினார்? இது எருசலேமின் மேன்மையா? 120 சீஷர்கள் இருந்த மேல்வீட்டின் மேன்மையா?

சீரியா தேசத்து படைத்தளபதி யோர்தானில் ஏழுதரம் முழுகினபோது முற்றிலும் சுகமானான். அக்காலத்திலே, எத்தனையோ பேர் அதே யோர்தானில் முழுகியிருப்பார்கள். இன்று எத்தனைபேர் சென்று முழுகி வருகின்றார்கள். அப்படியானால் ஏன் நாகமான் மட்டும் சுகமானான்? இது எருசலேமின் மேன்மையா? யோர்தான் நதியின் மேன்மையா? படைத் தளபதியின் மேன்மையா?

மீதியான் தேசத்திலே, ஓரேப் என்னும் மலையிலே தேவனாகிய கர்த்தர் மோசேக்கு தரிசனமானார். அதனால் அந்தத் தேசத்திலே, அந்த மலை க்கு சென்ற யாவரும் மோசே கண்ட காட்சியைக் கண்டார்களா? அங்கே சென்ற யாவரோடும் தேவன் பேசினாரா? அது மோசேயின் மேன்மையா? அந்த தேசத்தின் மேன்மையா அல்லது அந்த மலையின் மேன்மையா?

தேவனாகிய கர்த்தருடைய மகிமை சீனாய் மலையின்மேல் இறங்கியது. அதைக் கண்டவர்களும், அவருடைய சத்தத்தைக் கேட்டவர்களும் அங்கே காணப்பட்ட பரிசுத்த மகிமையைக் கண்டு பயந்து நடுங்கினார்கள். அப்படியானால் அந்த இடத்தை புனித பூமியாக்கிவிடலாமா? அதே மலை யின் அடிவாரத்திலே, தேவனுடைய ஜனங்கள் முரட்டாட்டம் செய்து, தேவனுக்கு விரோதமாக அவலட்சணமான பாவங்களையும் துரோகங்க ளையும் செய்தார்கள் அல்லவா?

சாலொமோன் எருசலேம் ஆலயத்தின் கட்டுமானபணியை முடித்து, ஆலயத்தை பிரதிஷ்டை செய்த போது, அங்கே தேவ மகிமை இறங் கியது. பல ஆண்டுகளுக்கு பின், நேபுகாத்நேச்சார் என்னும் பாபிலோன் ராஜா, எருசலேமுக்கு வந்து, கர்த்தருடைய ஆலயத்தையும், ராஜாவின் அரண்மனையையும், எருசலேமின் சகல கட்டடங்களையும், பெரிய வீடு கள் எல்லாவற்றையும் அக்கினியால் சுட்டெரித்துபோடும்படி தேவனாகிய கர்த்தர் நேபுகாத்நேச்சாரிடத்திலே ஒப்புக் கொடுத்தார். தேவனுடைய மகி மையானது இறங்கிய ஆலயத்தையும், பரிசுத்த நகரமாகிய எருசலே மையும் தேவன் ஏன் ஒப்புக் கொடுத்தார்?

தீர்க்கதரிசி சாமுவேலைத் தேடிச் சென்ற சவுல், தேவ வார்த்தையை பெற்று, சமஸ்த இஸ்ரவேலுக்கும் ராஜாவாக உயர்த்தப்பட்டான். சில ஆண்டுகளுக்கு பின், அதே தீர்க்கதரிசி சாமுவேல் சவுலைப் பார்த்து: கர்த்தருடைய வார்த்தையைப் புறக்கணித்தீர் நீர் இஸ்ரவேலின்மேல் ராஜாவாயிராதபடிக்கு, கர்த்தர் உம்மையும் புறக்கணித்துத் தள்ளினார் என்றார். (1 சாமு 15:26) தீர்க்கதரிசியாகிய சாமுவேல் தேவ வார்த் தையை மீறி சவுலின் மீறுதலை கவனியாமல் அவனை ஆசீர்வதிக்கக்

கூடுமோ? எதனால் சவுல் உயர்த்தப்பட்டான்? சில ஆண்டுகளுக்கு பின் ஏன் தேவனால் புறக்கணிக்கப்பட்டான், தாழ்த்தப்பட்டான்?

நம்முடைய ஆண்டவராகிய இயேசு, பல இடங்களுக்குச் சென்று, தியானம் செய்து ஜெபித்தார். அவர் சென்ற இடங்களிளெல்லாம், எண்ணி லடங்காத அற்புதங்களை செய்தார். ஆனால் எருசலேமிலேயிருந்த மதத் தலைவர்களும், அதிகாரிகளும், ஜனங்களுமாய் அவரை சிலுவையிலே அறையும்படிக்கு ஒருமித்திருந்தார்கள். அன்று ஆண்டவரரிகய இயேசு இந்த பூமியிலே உலாவிய இடங்களிலே, நடந்தவர்கள் எல்லோரும் அவ ருக்கு பிரியமானவர்களாக இருக்கவில்லை. பலர் இயேசுவை அசட்டை செய்தார்கள். பலர் தங்கள் இருதயத்தை இன்னும் கடினப்படுத்திக் கொண்டார்கள். இயேசு நடந்த இடங்களை பார்க்கும்படி இன்று பலர் யாத்திரை செல்கின்றார்கள். வேறு சிலர் உல்லாசப் பயணிகளாக செல் கின்றார்கள். இயேசு நடந்த பூமியிலே நடப்பதினால் எவரும் தேவனுக்குப் பிரியமாக இருக்க முடியாது. ஆண்டவர் இயேசுவின் வார்த்தையை கேட்டு, அதன்படி செய்கின்றவர்களே அவருக்குப் பிரியமுள்ளவர்களாக இருக்கின்றார்கள். (மத் 12:50, லூக் 6:46-49, யோவான் 15:7)

நாம் தியானம் செய்யும்படி குறிப்பிட்ட தேசத்திற்கோ, இடத்திற்கோ அல்லது நபரிடமோ செல்வதில் தவறில்லை. ஆனால் அப்படி விசேஷித்த இடங்களுக்கு செல்வதாலும், பிரபல்யமானவர்களை சந்திப்பதாலும் ஒரு மனிதனின் தியானம் தேவனுக்கு ஏற்புடையதாகிவிட முடியாது. இன்று தேவனை அறிந்தவர்களும், தேவனை அறியாதவர்களும் தங்கள் தீர்மா னங்களின்படி மனிதர்களால் புனித ஸ்தலங்கள் என்று நியமிக்கப்பட்ட இடங்களுக்குச் சென்று வருகின்றார்கள். அவை எல்லாம் தேவனுக்கு ஏற்புடையதாகிவிடக் கூடுமோ? ஒன்றான மெய்த்தேவனாகிய பரலோக பிதாவையும் அவர் அனுப்பினவராகிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நித்தியஜீவன் என்பதை நாம் திட்டமாக அறிந்து கொள்ள வேண்டும் (யோவான் 17:3). ஆதலால் நம்முடைய தியானம் மெய்தேவனாகிய கர்த்தருக்கு ஏற்புடையதாக இருக்க வேண்டும். (சங்கீதம் 19:14)

இன்று மனிதர்கள் பலஇடங்களிலே இருந்து தேவனைத் தேடுகின்றார்கள். சிலர் வியாதிப் படுக்கையிலே வைத்தியசாலைகளிலும், முதியோர் பரா மரிப்பு நிலையங்களிலும், அநாதை இல்லங்களிலும், சிறைச் சாலைக ளிலும், அகதி முகாங்களிலும், வீடு வாசலின்றி தெரு ஓரங்களிலும் இரு ந்து ஆண்டவராகிய இயேசுவின் நாமத்திலே பிதாவாகிய தேவனை நோக்கிப் பார்க்கின்றார்கள். வாழ்வு தரும் வசனங்களை தியானிக்கின் றார்கள். உண்மையாய் தம்மை நோக்கிப் கூப்பிடுகின்றவர்கள் சத்தத்தை அவர் கேட்கின்றார்.

அதே வேளையிலே பலர் புனித ஸ்தலங்களுக்கும், விசேஷித்த இடங்க ளுக்கும், பிரபல்யமான நபர்களை சந்திப்பதற்கும் பல ஆயிரக்கணக்கான டொலர்கள் செலவு செய்கின்றார்கள். சிலர் இவைகளைத் தங்கள் உல் லாசப் பயணமாக்கிக் கொள்கின்றார்கள். தேவனுடைய வார்த்தை யைக் கேட்டு, அதை தியானம் செய்து, அதற்குக் கீழ்படிந்து, அந்த வார்த் தையின்படி வாழ தன்னை ஒப்புக் கொடுகின்ற மனுஷன், எங்கே வாழ் ந்தாலும், எங்கே சென்றாலும், அங்கே தேவன் அவனுடைய சத்த த த்தைக் கேட்பார். அவனுடைய தியானத்தில் தேவன் பிரியமாக இருப்பார்.

தாவீது என்னும் மனிதன், மலைகளிலும், கெபிகளிலும், அந்நிய தேசங்களிலும், வனாந்திரங்களிலும் காடுகளிலும் இருக்கும்படியான சூழ்நிலைகள் அவனை நிர்பந்தித்தது. ஆனால் அவன் எங்கிருந்தாலும் தேவனைக் குறித்து சிந்தையுள்ளவனாக இருந்தான். தேவன் அவனோடிருந்தார்.

தானியேல் என்னும் தேவனுடைய தாசன், அந்நிய தேசத்திலே, சுகபோகமாக வாழும், தேவனை அறியாத மனிதர்கள் நடுவே, கைதியாகக் கொண்டு செல்லப்பட்டான். ஒரு சமயம் அவனை சிங்கக் கெபியிலே போட்டார்கள். அவன் தேவ வார்த்தைக்குத் தன்னை ஒப்புக் கொடுக்கின்ற மனிதனாக இருந்ததால் அவன் சென்ற இடமெல்லாம் தேவன் அவனோடிருந்தார்.

நற்செய்தியை அறிவிக்க சென்ற பவுல் சீலா என்னும் தேவ ஊழியர்களை; ஊரின் ஜனங்கள் பிடித்து, அடித்து, காயங்களுடன், சிறைச்சாலையிலே போட்டார்கள். அங்கே அவர்கள் நடு இராத்திரியிலே தேவனைத் துதித்தார்கள். தேவனுடைய பிரசன்னம் அங்கே சடிதியிலே இறங்கி அந்த இடத்தை அசைத்துப் போட்டது.

நம்முடைய ஆண்டவராகிய இயேசு, சத்திரத்திலே இடமில்லாததால் மாட்டு தொழுவத்திலே பிறந்தார். ஏரோது ராஜா, குழந்தையாகிய இயேசுவை கொலை செய்ய வகை தேடியதால், அவரை எகிப்திற்குக் கொண்டு சென்றார்கள். அவர் தன் ஊழியத்தை பிரதியட்சமாக ஆரம்பித்தபோது, அவர் ஆவியானவராலே வனாந்திரத்திற்கு கொண்டு செல்லப்பட்டு அங்கே பிசாசினால் சோதிக்கப்பட்டார். மதத் தலைவர்கள் அவருக்கு எதிர்த்து வந்தார்கள். ஒரு உயர்ந்த மலையிலே அவர் ஏறிய போது அவர் மறுரூபமாகினார். அவர் தம்மை சிலுவையிலே பலியாக ஒப்புக் கொடுக்கும் முன்பாக கெத்சமனே பூங்காவிலே தனித்திருந்து ஜெபித்தார். அவரை கைது செய்த போது, அதிகாரிகள் மத்தியிலே அவமானப்பட்டார். ஜனங்களால் புறக்கணிக்கப்பட்டார். போர்ச்சேவகர்களால் அடிக்கப்பட்டார். கள்வர்கள் மத்தியிலே சிலுவையிலே தொங்கினார். ஆனால் அவர் எங்கிருந்தாலும், எப்படியான சூழ்நிலையிலே இருந்தாலும், பிதாவாகிய தேவனுடைய சித்தம் செய்வதையே தன் தியானமாகக் கொண்டிருந்தார்.

எருசலேம் தேவன் தெரிந்து கொண்ட ஸ்தானம். கல்வாரி மலை நம் ஆண்டவராகிய இயேசு, பிதாவாகிய தேவனுடைய சித்தத்தின்படியே, நமக்காக பலியாகிய இடம். ஆபிரகாம், மோசே, பேதுரு, யோவான் போன்றவர்கள் தேவனாலே தெரிந்து கொள்ளப்பட்ட அவருடைய தாசர்கள். ஆனால் ஜனங்களோ, ஆண்டவர் இயேசுவையும், நித்திய ஜீவனைக் கொடுக்கின்ற அவருடைய வார்த்தைகளையும் தள்ளிவிட்டு, அவர் வாழ்ந்த இடம் தங்களுடையது என்றும், அவர் தெரிந்து கொண்ட தாசர்கள் தம்முடையவர்கள் என்றும் பெருமை பாராட்டுகின்றார்கள். நீங்களோ அவ்வண்ணமாக இருக்காமல், எங்கே சென்றாலும், எங்கே வாழ்ந்தாலும், எப்படிப்பட்ட சூழ்நிலைக்குள் தள்ளப்பட்டாலும், பிதாவாகிய தேவனுடைய சித்தத்தை செய்யும்படி அவர் விளம்பிய வாழ்வு தரும் திருவசனங்களையே தியானித்து, அந்த வசனங்களுக்கு உங்களை முழுமனதோடு ஒப்புக் கொடுங்கள். அப்பொழுது நீங்கள் தேவனை தரிசிப்பீர்கள், அவர் சமுகத்திலே ஆன்மீக விடுதலை உண்டாகும். எனவே கர்த்தரு

டைய வேதத்தின் தியானத்தை உங்கள் சிந்தைகளைவிட்டு ஒருபோதும் அகற்றிவிடாதிருங்கள். கர்த்தருடைய வேதமே மனமகிழ்ச்சி

ஆதியிலே, தேவ சாயலிலே சிருஷ்டிக்கப்பட்ட ஆதாம் ஏவாளுக்கு தேவன் ஒரு கட்டளையை மட்டும் கொடுத்திருந்தார். நீங்கள் சாகாதபடிக்கு தோட்டத்தின் நடுவில் இருக்கின்ற விருட்சத்தின் கனியைப் புசிக்கவும் அதைத் தொடவும் வேண்டாம் என்று அவர்களுக்கு கூறியிருந்தார். அது தேவனுடைய நித்திய வாழ்வைக் கொடுக்கும் கட்டளை. அப்பொழுது பிசாசானவன் ஸ்திரீயை நோக்கி: நீங்கள் சாகவே சாவதில்லை. நீங்கள் இதைப் புசிக்கும் நாளிலே உங்கள் கண்கள் திறக்கப்படும் என்றும், நீங்கள் நன்மை தீமை அறிந்து தேவர்களைப்போல் இருப்பீர்கள் என்றும் தேவன் அறிவார் என்றது. அப்பொழுது ஏவாள், அந்த விருட்சம் புசிப்புக்கு நல்லதும், பார்வைக்கு இன்பமும், புத்தியைத் தெளிவிக்கிறதற்கு இச்சிக்கப்படத்தக்க விருட்சமுமாய் இருக்கிறது என்று கண்டு, அதின் கனியைப் பறித்து, புசித்து, தன் புருஷனுக்கும் கொடுத்தாள் அவனும் புசித்தான்.

பரிசுப்பொருள் இருந்த அழகான பொதியைக் கண்ட அந்த சிறுமியானவள் மிகவும் பரவசமடைந்தாள். ஆனால் உள்ளே இருக்கும் பரிசுப் பொருளை கண்ட போது, அவள் ஏமாற்றமடைந்தாள். அதுபோல, பிசாசின் மருகூட்டப்பட்ட வஞ்சகமான வார்த்தைகளை கேட்ட ஏவாள், தேவ கட்டளைக்கு கீழ்படிவதைவிட பிசாசின் வஞ்சகமான வார்த்தை, அவள் பார்வைக்கு இன்பமாக இருந்தது. அவர்கள் அதை புசித்த போது, நித்திய ஜீவனை இழந்து, நித்திய மரணத்திற்குப் பாத்திரரானார்கள். தேவனுடைய ஒரே கட்டளையை தங்கள் சிந்தையில் வைத்திருக்க வேண்டியவர்கள், பிசாசின் வஞ்சகமான வார்த்தையை தியானிக்கும்படிக்கு தங்கள் சிந்தையிலே இடங் கொடுத்தார்கள். பிசாசின் வார்த்தைகளை அவர்கள் தங்கள் சிந்தையிலே எடுத்து தியானித்த போது, மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையும் அவர்களை மேற்கொண்டது. அழகாக பொதியிடப்பட்ட பிசாசின் மாயையான வஞ்சகத்திற்குள் அவர்கள் சிக்கிக் கொண்டார்கள். அதனால் அவர்கள் பாவம் செய்தார்கள்.

திருடன் திருடவும் கொல்லவும் அழிக்கவும் வருகிறானேயன்றி வேறொன்றுக்கும் வரான். நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன் என்று ஆண்டவர் இயேசு கூறியிருக்கின்றார். அதாவது, நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்துண்டாகி, சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கிவருகிறது. பரத்திலிருந்து வராதவைகள் யாவும் இந்த உலகத்திலே உண்டானவைகள். இந்த உலகமானது பிசாசின் வஞ்சகமான மயைக்குள் சிக்கியிருக்கின்து. (யோவான் 10:10, யாக்கோபு 1:17, 1 யோவான் 2:16-17, 2 கொரி 2:11)

பிசாசானவன் வரும் போது, அழகான இச்சிக்கத்தக்க பொதிகளோடு உங்களிடத்திலே வருவான். அவன் ஆட்டுத்தோலைப் போர்த்துக் கொண்டு உங்களிடத்தில் வருவான். உள்ளத்திலோ அவன் பட்சிக்கிற ஓநாய். இன்று பரவலாக தியானமானது வேறு உருவங்களிலே வருகின்றது! உடற்பயிற்சி என்ற போர்வையிலே தியான முறைமைகள் உலகம்

முழுவதும் அறிமுகப்படுத்தப்படுகின்றது. தெளிந்த புத்தியுள்ளவர்களாக விழித்திருங்கள்! (மத்தேயு 7:15, 1 பேதுரு 5:8)

மனினுடைய சிந்தையானது காரியங்கள் யாவும் உருவேற்றப்படும் பணி மனையாக இருக்கின்றது. நாம் பார்க்கும், கேட்கும், வாசிக்கும், சிந்திக்கும் காரியங்கள் யாவும் அங்கே வேத வார்த்தைகளினால் ஆராயப்பட வேண்டும் எனவே நாம் இந்த உலகத்தை ஜெயிக்கும்படிக்கு நம்முடைய சிந்தையிலே தேவனுடைய வேதம் எப்போதும் இருக்க வேண்டும். கட்டளையே விளக்கு, வேதமே வெளிச்சம், போதகசிட்சையே ஜீவ வழி. (நீதிமொழிகள் 6:23)

இன்று உடற்பயிற்சியோடு சேர்ந்த தியானத்தை இவ்வண்ணமாக கற்றுக் கொடுக்கின்றார்கள்:

- உங்கள் மனதை அமைதி நிலைக்கு கொண்டு வாருங்கள்
- ஒன்றைக் குறித்தும் சிந்திக்க வேண்டாம் (சிந்தையை வெறுமையாக்குங்கள்)
- மூச்சை உள்வாங்கி வெளியே விடுங்கள்

கேட்பதற்கு இதில் எந்த தவறும் தெரியவில்லை என்பது போல உங்களுக்குத் தோன்றும். ஆனால் தேவனுடைய வசனமே நாம் இடறாதபடிக்கு நம்முடைய கால்களுக்குத் தீபமும், செல்லும் வழியிலே தடுமாறாதபடிக்கு நம்முடைய பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது. (சங்கீதம் 119:105) எனவே அந்த வார்த்தைகளின் வெளிச்சத்திலே, நீங்கள் உடற்பயிற்சியோடு கூடிய தியானம் என்று மனிதர்கள் கூறும் தியான முறைமையயை ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

தியானத்தைக் குறித்து பரிசுத்த வேதாகமம் கூறும் ஒரு சில வசனங்களை பார்ப்போம்:

இந்த நியாயப்பிரமாண புஸ்தகம் உன் வாயைவிட்டுப் பிரியாதிருப்பதாக. இதில் எழுதியிருக்கிறவைகளின்படியெல்லாம் நீ செய்யக் கவனமாயிருக்கும்படி, இரவும் பகலும் அதைத் தியானித்துக்கொண்டிருப்பாயாக அப்பொழுது நீ உன் வழியை வாய்க்கப்பண்ணுவாய், அப்பொழுது புத்திமானாயும் நடந்துகொள்ளுவாய். (யோசுவா 1:8)

என் படுக்கையின்மேல் நான் உம்மை நினைக்கும்போது, இராச்சாமங்களில் உம்மைத் தியானிக்கிறேன். (சங்கீதம் 63:6)

என் கன்மலையும் என் மீட்பருமாகிய கர்த்தாவே, என் வாயின் வார்த்தைகளும், என் இருதயத்தின் தியானமும், உமது சமுகத்தில் பிரீதியாயிருப்பதாக. (சங்கீதம் 19:14)

அணையாத மெய்யான தீபமாகிய தேவனுடைய வார்த்தைகளினால் உங்கள் மனதை நிரப்பி அதையே நீங்கள் உட்கார்ந்திருக்கும் போதும், எழுந்திருக்கும் போதும், இரவும் பகலும், தியானித்துக் கொண்டிருங்கள் என்றே பரிசுத்த வேதாகமம் கூறுகின்றது. ஆனால் இவர்களோ, இது உடற்பயிற்சி, எனவே தியானம் செய்யும் போது ஒன்றையும் சிந்திக்காமல், உங்கள் மனதை வெறுமையாக்குங்கள் என்று தேவனுடைய வார்த்தைக்கு முரணாக கற்றுக் கொடுக்கின்றார்கள். ஆனால் நீங்களோ

உங்கள் மனதில் எரிந்து கொண்டிருக்கும் மெய்யான தீபமாகிய தேவனுடைய வார்த்தையை ஒரு கணமும் கூட அனைத்துப் போடுவதற்கு இடங் கொடுக்காதிருங்கள்.

நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்துண்டாகி, சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கிவருகிறது. ஒன்றான மெய்த்தே வனாகிய பிதாவையும், அவருடைய திருக்குமாரனையும் அறியாதவர்கள் எப்படி தேவனுக்குப் பிரியமான தியானத்தைக் கற்று கொடுக்க முடியும்? அப்படியானால், மனதை வெறுமையாக்கிக் கொள்ள வேண்டும் என்னும் உடற்பயிற்சியின் ஆலோசனையானது யாரிடமிருந்து வந்தது? ஒன்றையும் சிந்திக்காமல், உங்கள் மனதை வெறுமையாக்கி கொள்ள வேண்டும் என்று ஆலோசனை கூறும் இவர்கள் யார்? ஆண்டவர் இயேசுவை தங்கள் வாழ்க்கையில் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டார்களா?

தேவ வசனத்தால் காவல் செய்யப்படாத, வெறுமையாக இருக்கும் மனி தனுடைய சிந்தையாகிய பணிமனையிலே எப்படிப்பட்ட சிந்தைகள் உண் டாகும்? அது சீக்கரமாய் இந்த உலகத்திற்குரிய மாம்ச இச்சைகளாலும், கண்களின் இச்சைகளாலும், ஜீவனத்தின் பெருமைகளாலும் நிறைந்து விடும். என்னோடு சேர்க்காதவன் சிதறடிக்கின்றான் என்று ஆண்டவர் இயேசு கூறியிருக்கின்றார். ஆண்டவர் இயேசுவோடு இல்லாதவன் உலக த்தோடு இருக்கின்றான். உலகமானது பிசாசின் பிடிக்குள் இருக்கின்றது.

பிரியமானவர்களே, உடற்பயிற்சி செய்வது ஆரோக்கியத்திற்கு நல்லது. ஆனால் உங்கள் சிந்தையோடு விளையடுவதற்கு அது ஒரு விளையாட்டுப் பொருள் அல்ல. அங்கே தேவனுடைய வார்த்தைகள் எப்போதும் தீபமாக எரிந்து கொண்டிருக்க வேண்டும். உங்கள் சிந்தையைப் பற்றிய காரியங்களை குறித்து உங்களுக்கு ஆலோசனை கூறுபவர்கள் யார் என்பதை அவர்களுடைய கனிகளினாலே இனங் கண்டு அறியுங்கள். (மத்தேயு 7:13-18)

துன்மார்க்கருடைய ஆலோசனையில் நடவாமலும், பாவிகளுடைய வழி யில் நில்லாமலும், பரியாசக்காரர் உட்காரும் இடத்தில் உட்காராமலும், கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான். (சங்கீதம் 1:1-2)

கடைசியாக, சகோதரரே, உண்மையுள்ளவைகளெவைகளோ, ஒழுக்கமு ள்ளவைகளெவைகளோ, நீதியுள்ளவைகளெவைகளோ, கற்புள்ளவைக ளெவைகளோ, அன்புள்ளவைகளெவைகளோ, நற்கீர்த்தியுள்ளவைகளெ வைகளோ, புண்ணியம் எதுவோ, புகழ் எதுவோ அவைகளையே சிந்தித் துக்கொண்டிருங்கள். (பிலிப்பியர் 4:8)

இருள் சூழந்த இந்த உலகத்திலே, நாம் வஞ்சிக்கப்பட்டு போகாதபடிக்கு, உங்கள் மனக் கண்கள் பிரகாசிக்கும் தேவனுடைய வார்தையானது அணையாத தீபமாக எப்போதும் ஒளி வீசட்டும்.

வானமும் பூமியும் ஒழிந்துபோம், ஆண்டவர் இயேசுவின் வார்த்தைகளோ ஒழிந்துபோவதில்லை. நித்திய ஜீவனைக் கொடுக்கும் அழியாத அவரு டைய திருவார்த்தைகளிலே எப்போதும் தியானமாயிருங்கள். ஆமேன்!

# பரம பிதாவின் சித்தம்

**பிரசங்கக் குறிப்புக்கள்** - போதகர் ரஞ்சிற் கொன்ஸ்ரன்ரைன்

**[IF YOU WOULD LIKE TO LISTEN TO THE FULL VERSION OF THIS MESSAGE IN ENGLISH OR TAMIL, FOLLOW THE LINK THAT IS PROVIDED AT THE END THIS SERMON NOTES]**

## பிரதான வாசகம் - யோவான் 4:24

"பரலோக பிதாவே, என்னுடைய வாழ்க்கை மாற வேண்டும். மனவாஞ்சையடன் உம்முடைய சித்தத்தை நான் செய்ய வேண்டும்." என்று உங்களில் எத்தனை பேர் அனுதினமும் ஜெபம் செய்து வருகின்றீர்கள். அப்படி நீங்கள் ஜெபித்து வரவில்லை என்றால், இன்றே ஆரம்பியுங்கள். மனவிருப்பத்தோடு பரலோக பிதாவின் சித்தத்தை நான் செய்து முடிக்க வேண்டும் என்று அறிக்கையிட்டு ஜெபம் செய்யுங்கள். ஒரு மா மரத்தை எடுத்துக் கொள்வோம் என்றால், அது அதன் காலத்திலே தன் கனியை கொடுகின்றது. மா மரமானது மாங்கனியை கொடுப்பதற்கு அது கஷ்டப்படுவதில்லை. அது அந்த மரத்தின் இயல்பாக இருக்கின்றது. அந்தப் பிரகாரமாக, தேவ பிள்ளைகளுடைய இயல்பானது, தங்களுடைய பிதாவாகிய தேவனுடைய சித்தத்தை இந்தப் பூமியிலே நிறைவேற்றுவதாக இருக்க வேண்டும்.

நான் தேவனை அறியேன், அவர் எனக்கு ஒன்றும் செய்யவில்லை என்று உங்களில் யாராவது கூறமுடியுமா? ஒரு போதகர், ஒரு மனிதனுக்கு தேவனைக் குறித்து பல காரியங்களை கூறிக் கொண்டிருந்தார். அந்த மனிதனோ, கடவுள் இல்லை என்று அந்த போதகரோடு வாக்குவாதம் பண்ணிக் கொண்டிருந்தான். அவர்கள் இருவரும் தென்னந் தோட்டத்தின் அருகாக நடந்து போய் கொண்டிருந்த வேளையிலே, அந்த மனிதனுக்கு அருகாக ஒரு தேங்காய் விழுந்துவிட்டது. அப்போது அவன் தன் கைகளை நெஞ்சில் வைத்துக் கொண்டு, அவனை அறியாமலே "கடவுளே, நல்ல காலம் இந்த தேங்காய் என் தலையிலே விழவில்லை" என்று சத்தமாகக் கூறினான். கடவுள் இல்லை என்று வாதிக்கின்றவர்கள் கூட, ஆபத்தும், பயங்கரங்களும் அவர்களை சூழ்ந்து கொள்ளும் போது, அவர்களை அறியாமலே தேவனை நோக்கி ஜெபம் செய்கின்றார்கள். தேவன் நமக்கு செய்த நன்மைகள் எண்ணற்றதாயிருக்கின்றது. நாம் யாவரும் நிர்மூலமாகாதிருப்பது தேவனுடைய சுத்த கிருபையாயிருக்கின்றது.

நான் இப்போது அல்ல, வயது சென்ற காலத்திலே, தேவனே, தேவனே என்று அவரை கூப்பிட்டு அவருடைய சித்தத்தை செய்வேன் என்று சிலர் கூறிக் கொள்ளுவதுண்டு. நாளைக்கு செய்வேன் என்றல்ல, இன்று இப்போது நான் பரலோக பிதாவின் சித்தத்திற்கு என்னை ஒப்புக் கொடுக்க வேண்டும். தேவன் என்னைக் குறித்து ஒரு தவறான விருப்பத்தை வைத்திருக்கின்றார் என்று யாராவது கூறமுடியுமா? ஒருவரும் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடைய வேண்டும் என்பதே அவருடைய விருப்பம். தேவன் நமக்கு நன்மை செய்கின்றவராயிருக்கின்றார். அவரிடத்தில் தீமை இல்லை. ஆபத்துக் காலத்திலே அவர் அனுகூலமான துணையாய் இருக்கின்றார்.

அப்படியானால், தேவ சித்தத்தை செய்வதற்கு உங்களை ஒப்புக் கொடுக்க ஏன் தயங்குகின்றீர்கள்? தாமதம் என்ன? மனமகிழ்ச்சியோடு இன்றே உங்களை ஒப்புக் கொடுங்கள்.

தேவனுடைய சித்த்தத்தை செய்கின்றவர்கள் பாக்கியவான்கள். ஒருவன் தன்னை பிதாவாகிய தேவனுடைய சித்தத்திற்கு ஒப்புக் கொடுக்காமல், தன் சுய சித்தத்தை நிறைவேற்றுபவனாக இருந்தால். அவன் பரலோக ராஜ்யத்திற்குரியவனல்ல. இவ்விதமாக பிதாவாகிய தேவனுடைய சிதத்த்தை குறித்து அசட்டையாக வாழ்பவர்களின் முடிவு என்ன?

பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோகராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கிக் கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை. அந்நாளில் அநேகர் என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! உமது நாமத்தினாலே தீர்க்கதரிசனம் உரைத்தோம் அல்லவா? உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்தினோம் அல்லவா? உமது நாமத்தினாலே அநேக அற்புதங்களைச் செய்தோம் அல்லவா? என்பார்கள். அப்பொழுது, நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை அக்கிரமச் செய்கைக்காரரே, என்னைவிட்டு அகன்றுபோங்கள் என்று அவர்களுக்குச் சொல்லுவேன் என்று ஆண்டவராகிய இயேசு கூறியிருக்கின்றார்.

ஒருவன் தேவன் அறிந்திருக்கலாம், அவருடைய நாமத்தினாலே அவன் தீர்க்கதரிசனங்களை உரைத்து, அற்புதங்களை செய்திருக்கலாம். அவைகளை செய்தும் அவன் பிதாவாகிய தேவனுடைய சித்தத்தை தன் வாழ்வில் நிறைவேற்றாதவனிடத்திலே, தேவ அன்பு இல்லை. தேவன் அவனை அறியார். கடைசி நாளிலே, தேவன் முன்னிலையிலே ஒருவன் தேவனால் அறியப்பட்டவனாக இருக்க விரும்பினால் பிதாவாகிய தேவனுடைய சித்தத்தை தன் வாழ்விலே நிறைவேற்றி முடிக்க வாஞ்சையுள்ளவனாக இருக்க வேண்டும்.

ஒரு சமயம் ஆண்டவர் இயேசு தம்முடைய சீஷர்களை நோக்கி: நான் என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்து அவருடைய கிரியையை முடிப்பதே என்னுடைய போஜனமாயிருக்கிறது என்று பிதாவாகிய தேவனுடைய சித்தத்தை செய்வதின் முக்கியத்துவத்தை தெரியப்படுத்தினார். அதுபோல வே நம்முடைய வாழ்விலே பிதாவாகிய தேவனுடைய சித்தத்தை செய்வதே எங்கள் வாழ்வின் முதன்மையானதாக இருக்க வேண்டும்.

[இந்த தேவ செய்தியின் முழுமையான ஒலிப்பதிவை பின்வரும்
இணையத் தளத்தில் (**INTERNET WEBSITE** இல்)
தமிழ் ஆங்கில மொழிகளில் கேட்கலாம். https://gtachurch.ca/im]

# எங்கள் தியானம்

இன்றைய உலகிலே, உடற்பயிற்சி என்ற போர்வையிலே தியானத்தை குறித்து பல விதமாக கற்றுக் கொடுக்கின்றார்கள். தியானம் செய்யும் போது, எதையுமே சிந்திக்காமல், மனதை வெறுமையாக்கிக் கொள்ள வேண்டும் என்று கூறுகின்றார்கள். அவைகளினாலே நீங்கள் இழுப்பு ண்டு போய் விடாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள். எமது வாழ்விலே எந்த ஒரு காரியத்தைக் குறித்தாவது தேவனை அறியாதவர்கள் புதிதான ஒரு விஷயத்தைக் கூறும்போது அதை வேத வார்த்தையின் வெளிச்ச த்திலே ஆராய்ந்து பாருங்கள். தியா னத்தைக் குறித்து தேவனுடைய வார்த்தை என்ன கூறுகின்றது? இந்த நியாயப்பிரமாண புஸ்தகம் உன் வாயைவிட்டுப் பிரியாதிருப்பதாக. இதில் எழுதியிருக்கிறவைகளின்படி யெல்லாம் நீ செய்யக் கவனமாயிரு க்கும்படி, **இரவும் பகலும் அதைத் தியானித்துக்கொண்டிருப்பாயாக**. அப்பொழுது நீ உன் வழியை வாய்க்கப்பண்ணுவாய், அப்பொழுது புத்திமானாயும் நடந்து கொள்ளுவாய் (யோசுவா 1:8). என் படுக்கை யின்மேல் நான் உம்மை நினைக்கும்போது, இராச்சாமங்களில் உம்மைத் தியானிக்கிறேன் (சங்கீதம் 63:6). என் வாயின் வார்த்தைகளும், என் இருதயத்தின் தியானமும், உமது சமுகத்தில் பிரீதியாயிருப்பதாக (சங் கீதம் 19:14). தேவனுடைய வழிகளைக் குறித்த தியானமே, பிரதானமாக நம் மனதிலே எப்போதும் இருக்க வேண்டும். மனுஷனுக்குச் செம்மை யாய்த் தோன்றுகிற வழி உண்டு. அதின் முடிவோ மரண வழிகள். இந்த உலகிலே துன்மார்க்கர் கூறும் ஆலோசனைகள் உண்டு. பாவிகள் நிற்கும் வழிகள் உண்டு. ஆண்டவர் இயேசுவைக் குறித்து பரியாசம் செய்பவர்கள் உட்காரும் இடங்களுண்டு. அவைகளை நீங்கள் உங் களை விட்டு அகற்றி, கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இர வும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருங்கள். கர்த்தருடைய வேதம் குறைவற்றதும், ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறதுமாயிருக்கிறது. கர்த்தருடைய சாட்சிசத்தியமும், பேதையை ஞானியாக்குகிறதுமாயிருக் கிறது. உங்கள் சுவாசம் உங்களிலிருக்கும் வரைக்கும் தேவனுடைய வார்த்தை உங்கள் சிந்தையை விட்டு விலகாதிருப்பதாக. அவருடைய வேதமே மனமகிழ்ச்சி. அவருடைய வார்த்தைகளே ஔஷதம். அவை களே நம் கால்களுக்கு தீபமும் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கின்றது.

**யோசுவா 1:8**

இதில் எழுதியிருக்கிறவை களின்படியெல்லாம் நீ செய் யக் கவனமாயிருக்கும்படி, இரவும் பகலும் அதைத் தியானித்துக்கொண்டிருப்பா யாக

**ஜெபம்**: ஜீவ சுவாசத்தை எனக்குத் தந்த தேவனே, அந்த சுவாசம் என்னி லிருக்கும் வரைக்கும் உம்முடைய வார்த்தையையே நான் தியானித்து அதன்படி வாழ எனக்கு உணர்வுள்ள இருதயத்தைத் தந்தருள்வீராக. இரட் சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# என் வாழ்வின் எல்லை எங்கே?

**எரேமியா 5:22**

**அலைகள் மோதியடித்தாலும் மேற்கொள்ளாதபடிக்கும், அவைகள் இரைந்தாலும் கடவாதபடிக்கும், கடக்கக்கூடாத நித்திய பிரமாணமாக சமுத்திரத்தின் மணலை எல்லையாய் வைத்திருக்கிறவராகிய எனக்குமுன்பாக அதிராதிருப்பீர்களோ?**

ஆழி இரைந்து, அதன் அலைகள் மோதியடித்தாலும், சமுத்திரத்தின் ஜலங்கள் கொந்தளித்தாலும் அவை மேற்கொள்ளாதபடிக்கும், அவைகள் இரைந்தாலும் சமுத்திரத்தின் ஜலம் கடவாதபடிக்கும், கடக்கக்கூடாத நித்திய பிரமாணமாக சமுத்திரத்தின் மணலை, தேவனாகிய கர்த்தர் அதற்கு எல்லையாய் வைத்திருக்கிறார். இப்படியாக நாட்டுக்கு நாடு, வீட்டுக்கு வீடு என்று இந்த உலகத்திலே நாம் காணும் யாவற்றிற்கும் எல்லை வரையறுக்கப்பட்டிருக்கின்றது. "நீ எல்லையை மீறி என் வாழ்வின் தனிப்பட்ட காரியங்களுக்குள் வராதே" அல்லது "நீ எல்லை மீறிவிட்டாய்" என்று மனிதர்கள் மிரட்டல்களை விடுவதை நாம் பார்த்திருக்கின்றோம். ஆனால் சில மனிதர்கள் "இது என் வாழ்வு, என்னுடைய கனவு, நான் விரும்பியதை செய்வேன்" என்று வரையறையற்ற வாழ்க்கை வாழ்கின்றார்கள். மனிதன் தன் வாழ் நாட்களிலே தீர்மானங்களை சுயமாக அவன் எடுத்துக் கொள்ளும்படிக்கு அவனுக்கு சுயாதீனத்தை தேவன் கட்டளையிட்டிருக்கின்றார். அங்கே "வாழ்நாட்கள்" என்ற ஒரு எல்லையானது வைக்கப்பட்டிருகின்றதென்பதை அவன் உணராதிருக்கின்றான். குழந்தை பருவத்திற்கு ஒரு எல்லை உண்டு, சிறு பிள்ளைகளாக இருப்பதற்கு ஒரு எல்லை உண்டு. வாழ்வின் வசந்த காலம் எனப்படும் வாலிபத்தின் நாட்களுக்கும் ஒரு எல்லை உண்டு. ஆனால் மனிதனோ இவைகளைக் குறித்து சிந்தனையற்றவனாக, தான் பெற்றுக் கொண்ட சுயாதீனத்தை தன் மாம்சத்தின் இச்சைகளையும், உலக ஆசைகளையும் நிறைவேற்ற பயன்படுத்துகின்றான். ஒருவேளை இந்தப் பூமியிலே அவைகள் நன்மையானவைகளாக தோன்றலாம். ஆனால் இந்த பூமியும் அதிலுள்ள யாவும் அழிந்து போவதற்கும் தேவன் ஒரு எல்லையை வைத்திருக்கின்றார். பிரியமானவர்களே, உங்கள் வாழ்வின் எல்லை எங்கே? இதை குறித்து நீங்கள் எண்ணமுள்ளவர்களாக இருக்கின்றீர்களா? தேவனுடைய பிரமாணங்களை தன் எல்லையாக கொண்டிருக்கின்ற மனிதன் ஞானமுள்ளவன். சமுத்திரத்திற்கும் எல்லையைக் குறித்த தேவனுடைய பிரணமானங்களை அற்பமாக எண்ணாமல், வாழ்வின் எல்லையைக் குறித்து தியானம் செய்யுங்கள்.

**ஜெபம்:** சர்வ வல்லமையுள்ள தேவனே, நான் காணும் இந்த உலகம் ஒரு நாள் அழிந்து போகும் என்பதை உணர்ந்து வாழ்வு தரும் உம்முடைய பிரமாணத்தின் எல்லைக்குள் வாழ கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# எல்லையைத் தாண்டிடுவோம்

எகிப்திலே இருந்த தேவனுடைய ஜனங்கள் அடிமைத்தனத்தினால் தவித்து, முறையிட்டுக்கொண்டிருந்தார்கள் தேவன் அவர்கள் பெருமூச்சைக் கேட்டு, தாம் செய்த உடன்படிக்கையை நினைவுகூர்ந்தார். தேவனாகிய கர்த்தரோ, தம்முடைய ஓங்கிய புயத்தினாலும், பலத்த கரத்தினாலும், தம்முடைய ஜனங்களை அடிமைத்தனத்திலிருந்த விடுதலையாக்கி, சுயாதீனத்தை கொடுத்து, செழிப்புள்ள கானான்தேசத்தில் சேர்ப்பேன் என்று வாக்குரைத்தார்.சர்வவல்லமையு ள்ள தேவன் முன்குறித்த நாளிலே, ஜனங்கள் யாவரும் அடிமைத்தனத்தின் எல்லையாகிய எகிப்துதேசத்தின் எல்லையை தாண்டினார்கள். எகிப்தின் எல்லைகளுக்குள் இருந்த போது, அவர்கள் மெய்த் தேவனாகிய கர்த்தரை மறந்து எகிப்தில் விக்கிரகங்களை தங்கள் தேவனாக சேவித்தார்கள். எகிப்திலிருந்த போது மாம்ச இச்சைகளின்படி வாழ்ந்து வந்தார்கள். (யோசுவா 24:14-16). பின்பு, சுயாதீனமாக வாழ்க்கை வாழும் நாட்களிலே, சவால்களும் நெருக்கங்க ளும் சூழ்ந்து கொள்ளும் போது, மறுபடியும் தாங்கள் பெற்ற சுயா தீனத்தை மறந்து, தாங்கள் கடந்து வந்த எகிப்தின் எல்லைக்குள் உட்பிரவேசிக்க மனதுள்ளவர்களாகவே இருந்தார்கள். அடிமைத்தனத்தின் பாவ வாழ்க்கையை மறுபடியும் வாஞ்சித்தார்கள். அவர்கள் தேவனுக்கு பிரியமற்ற வாழ்க்கை வாழ்ந்தார்கள். அதுபோலவே, நாமும் இரட்சகர் இயேசுவை அறியாத நாட்களிலே இந்த உலகத்தின் பாவ எல்லைக்குள் கட்டப்பட்டிருந்தோம்.தேவ கிருபையானது நம்முடைய வாழ்வில் வெளிப்பட்ட போது, இந்த உலகத்தின் பாவ வாழ்க்கையின் எல்லையைத் தேவ பெலனத்தினால் தாண்டினோம். வாழ்வில் சுயாதீனத்தைப் பெற்றுக் கொண்டோம். இந்த நாட்களிலே, வாழ்விலே சவால்களும், நெருக்கங்களும் நம்மை சூழ்ந்து கொள்ளும் போது, பழைய பாவவாழ்வின் எல்லைக் குள் மறுபடியும் உட்படலாகாது. நாம் இந்த உலக போக்குக்கு மறுபடியும் திரும்பாமல், நம்முடைய சொந்த தேசமாகிய பரம தேசத்தின் எல்லையை நோக்கி முன் செல்லுவோம். பழைய வாழ்க்கையிலே, பகை கசப்பு வன்மம் போன்றவைகளை மனதிலே வைத்திருந்தோம். இப்போது நாம் அந்த அந்தகார அடிமைத்தனத்தின் எல்லைக்குள் மறுபடியும் சென்றுவிடாமல், மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாக சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக் கொள்ளுங்கள்.

**எபேசியர் 4:22**

**அந்தப்படி, முந்தின நடக்கைக்குரிய மோசம்போக்கும் இச்சைகளாலே கெட்டுப்போகிற பழைய மனுஷனை நீங்கள் களைந்துபோட்டு,**

**ஜெபம்**: இருளின் வாழ்வை நீக்கி ஒளியின் ராஜ்யத்திற்கு என்னை அழைத்த தேவனே, நான் மறுபடியும் இருளின் அதிகாரத்தின் எல்லைக்குள் பேகாதாபடிக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்து நடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# கர்த்தர் குறித்த கால எல்லை

அக்காலத்திலே, சோதோம் என்னும் பட்டணம் செல்வ செழிப்புள்ளதாக இருந்தது. அதன் குடிகள் அகங்காரிகளும், பொல்லாதவர்களும், கர்த்தருக்கு முன்பாக மகா பாவிகளுமாய் இருந்தார்கள். இக்காலத்திலே நாம் கேள்விப்படுவது போன்ற அலங்கோலமான பாலியல் பாவங்கள் நிறைந்ததாக இருந்தது. (ஆதி 13:13, எசே 16:49, ஆதி 19:1-5). அங்கே லோத்து என்னும் ஒரு மனுஷன் நீதிமானாக இருந்த போதிலும், அந்த தேசத்தின் எல்லைகளுக்குள் குடியிருக்கும்படி தெரிந்து கொண்டான். அந்த பட்டணத்தின் அக்கிரமம் பெரியதாக இருந்ததால் சர்வ வல்லமையுள்ள தேவன் அந்த பட்டணத்தின் முடிவுக்கு காலத்தை குறித்தார். தேவனால் அனுப்பப்பட்ட தூதர்கள் லோத்தை நோக்கி: இவ்விடத்தில் இன்னும் உனக்கு யார் இருக்கிறார்கள்? மருமகனாவது, உன் குமாரராவது, உன் குமாரத்திகளாவது, பட்டணத்தில் உனக்குரிய எவர்களாவது இருந்தால், அவர்களை இந்த ஸ்தலத்திலிருந்து வெளியே அழைத்துக்கொண்டு போ. நாங்கள் இந்த ஸ்தலத்தை அழிக்கப்போகிறோம். இவர்கள் கூக்குரல் கர்த்தருடைய சமுகத்தில் பெரிதாயிருக்கிறது. இதை அழிக்கக் கர்த்தர் எங்களை அனுப்பினார் என்றார்கள். அப்பொழுது லோத்து புறப்பட்டு, தன் குமாரத்திகளை விவாகம்பண்ணப்போகிற தன் மருமக்கள்மாரோடே வரவிருக்கும் அழிவைக் குறித்துப் பேசினான். அவனுடைய மருமக்கள் மாரின் பார்வைக்கு அவன் தம்மை பரியாசம்பண்ணுகிறதாகக் கண்டது. தேவனுடைய தூதர்கள்: பட்டணத்திற்கு வரும் தண்டனையில் லோத்து அழியாதபடிக்கு அந்தப் புருஷர் அவன் கையையும், அவன் மனைவியின் கை யையும், அவன் இரண்டு குமாரத்திகளின் கையையும் பிடித்து, அவ னைப் பட்டணத்திற்கு வெளியே கொண்டுபோய் விட்டு, பின்னிட்டு பாராமல் ஓடிப் போங்கள் என்று கூறினார்கள். கர்த்தர் குறித்த காலத்தை பரிகாசம் செய்த அவனுடைய மருமக்கள் அந்த பட்டணத்தோடே அழிக்கப்பட்டார்கள். லோத்தினுடைய மனைவியின் இருதயம் சோதோமை பற்றியிருந்ததால் அவள் பின்னிட்டு திரும்பிப் பார்த்தாள். அவள் தேவனுடைய எச்சரிப்பின் சத்தத்தை அற்பமாக எண்ணினாள். இதினிமித்தம் உப்புத்தூணாய் மாறிவிட்டாள். பிரியமானவர்களே, கர்த்தர் குறித்த கால எல்லை நெருங்குகின்றது என்று, இன்று நீங்கள் கேட்கும் எச்சரி ப்பின் சத்தத்தை அசட்டை செய்யாதிருங்கள்.

**ஆதியாகமம் 19:17**

**உன் ஜீவன் தப்ப ஓடிப் போ, பின்னிட்டுப் பாராதே இந்தச் சமபூமியில் எங்கும் நில்லாதே.**

**ஜெபம்:** எச்சரிப்பின் வார்த்தைகளை தரும் தேவனே, நித்திய ராஜ்யத்தை நோக்கி சென்று கொண்டிருக்கும் நாங்கள், பின்னிட்டு திரும்பாதபடிக்கு உம் வார்த்தையின் வெளிச்சத்தில் வாழ கிருபை செய்வீராக.. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# இராக்காலம் வருகிறது

ஒரு கிராமத்திலே வசித்து வந்த மனிதனானவன், மழைகாலம் வருவதற்கு இன்னும் சில வாரங்களே இருக்கின்றது என்பதை உணர்ந்தவனாய், நாட்களை விரயப்படுத்தாமல், சீக்கரமாய் காட்டிற்கு சென்று மழைகாலத்திற்கு வேண்டிய விறகுகளை வெட்டி, அவைகளை காயவிட்டு, ஈரமாகாதபடிக்கு பாதுகாப்பான இடத்திலே சேகரித்து வைத்தான். இந்த மனிதனுடைய வாழ்க்கையை சற்று சிந்தித்துப் பாருங்கள். அந்த மனிதனானவன், கோடை காலத்திற்கு ஒரு எல்லை உண்டு என்பதை அறிந்தவனாய் அந் நாட்களிலே செய்யப்பட வேண்டிய வாழ்க்கைக்கு அத்தியவசியமான முக்கிய விடயங்களைக் குறித்து கவனமுள்ளவனாக இருந்தான். பிரியமானவர்களே, "பகற்காலமிருக்குமட்டும் நான் என்னை அனுப்பினவருடைய கிரியைகளைச் செய்யவேண்டும். ஒருவனும் கிரியை செய்யக்கூடாத இராக்காலம் வருகிறது." என்று ஆண்டவராகிய இயேசு கூறியிருக்கின்றார். தேவ கிருபையின் நாட்கள் நமக்கு ஈவாக கொடுக்கப்பட்டிருக்கின்றது. தேவன் பரலோகத்தில் இருக்கின்றார். அவருடைய கிருபை ஒருநாளும் ஒழிந்து போவதில்லை. ஆனால், இந்த பூமியிலிருந்து தேவ கிருபையின் நாட்கள் முடிவதற்குரிய எல்லை குறிக்கப்பட்டிருக்கின்றது. அந்த கிராமத்தில் வசித்து வந்த அந்த குடியானவனைப் போல நாமும் ஞானமுள்ளவர்களாக நாட்களை பிரயோஜனப் படுத்திக் கொள்ள வேண்டும். செல்வத் திரட்சியுள்ள பட்டணங்களிலே வாழும் மனிதர்கள், விறகுக ளைக் குறித்தோ, தண்ணீரைக் குறித்தோ அல்லது உணவைக் குறித்தோ கவலையடைவதில்லை. ஆனால் அவர்கள் கோடை காலம் முடிவதற்கு முன், தாம் வாழ்க்கையை உல்லாசமாக கழிக்க வேண்டும் என்று வாழ்கின்றார்கள் இதனால் சில மனிதர்களுடைய வாழ்க்கையிலே கோடை காலங்களிலே, ஆலயத்திற்கு சென்று தேவனை ஆராதிப்பது கூட இரண்டாவது இடத்திற்கு சென்று விடுகின்றது. அது போலவே தங்கள் ஆவிக்குரிய வாழ்விலும், தாங்கள் இந்தப் பூமியிலே ஆரோக்கியமாக இருக்கும் நாட்களிலே இந்தப் பூமியிலே ஆஸ்திகளை சேர்த்து வைக்க வேண்டும் என்று அயராது உழைப்பதால், பரலோக தரிசனத்தை குறித்து உணர்வு அற்றவர்களாக மாறிவிடுகின்றார்கள். பிரியமானவர்களே, ஆண்டவர் இயேசு வருகின்ற நாட்கள் சமீபமாக உள்ளது. நித்திரையைவிட்டு எழுந்திருக்கத்தக்க வேளையாயிற்றென்று, நாம் காலத்தை அறிந்தவர்களாய், கிரயைகளை நடப்பிப்போம்.

**யோவான் 9:4**

**ஒருவனும் கிரியை செய்யக்கூடாத இராக்காலம் வருகிறது.**

**ஜெபம்**: தெய்வீக சாயல் அடையும்படி அழைத்த தேவனே, என் வாழ்விலுள்ள மாம்சத்தின் கிரியைகளை ஆரம்பத்திலேயே விட்டுவிட ஞானத்தின் ஆவியை தந்து என்னை வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# புருஷர்களுக்குரிய பிரமாணம்

“என்னுடைய குடும்ப நிலைமை உங்களுடையது போல அல்ல. என் குடும்பத்திலிருக்கும் விவகாரங்களானது எனக்கு மட்டும் தான் தெரியும். அதை எப்படி சொல்வதென்று தெரியவில்லை” என்று ஒரு குடுபத் தலைவன் தன் சபைப் போதகரிடம் கூறினான். வயதான போதகர் அவ னை நோக்கி: தம்பி, உன்னுடைய தனித்துவான நிலைமையானது என க்குத் தெரியாது ஆனால் உன்னை அன்பு கூர்ந்து அழைத்த தெய்வம் இயேசு அதை அறிந்திருக்கின்றார். உன் நீதி நியாயங்களை அவரிடம் கூறு. யாவற்றிற்கும் மாறாத பிரமா ணத்தை கொடுத்த கர்த்தர் குடும்ப வாழ்க்கை க்கும் நமக்கு பிரமாணங்களை கொடுத்திருக்கின்றார். இந்த உலக த்திலே உங்களுக்கு உபத்திரவங்கள் உண்டு என்பதன் பொருள் என்ன? அந்த உபத்திரவமாது தேவனை அறியாத மனிதர்களிடம் மட்டும் இருந்துதான் வருமா? ஒரு வேளை அந்த உபத்திரவம் உன் மனைவி வழியாக உனக்கு உண்டாகலாம் அல்லது உன் பிள்ளைகள் வழியா கக்கூட உண்டாகலாம். உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள், உங்க ளைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள் உங்களை நிந்திக்கிறவர்களு க்காக ஜெபம்பண்ணுங்கள் என்ற வார்த்தைகளின்படி நீ உன் சத்துரு க்களுக்கு கூட அப்படியாக இருக்க வேண்டும் என்றால் உன் மனை வியும் உன் பிள்ளைகளும் எத்தனை அதிகம். உன் மனைவியானவள் கர்த்தரின் வார்த்தையின்படி உனக்கு கீழ்படியாமல் இருப்பதினால் நீ அவளை வெறுத்து தள்ளுவது தேவ நீதியாகுமோ? தேவனானவர், உன் மனைவிக்கு கொடுத்த எல்லையை அவள் மீறி நடப்பதால், தேவன் புருஷனக்கு கொடுத்த எல்லையை மீறுவது தேவனுக்கு முன்பாக உனக்கு நியாயமாகுமோ? உங்களைச் சிநேகிக்கிறவர்களையே நீங்கள் சிநேகித்தால், உங்களுக்குப் பலன் என்ன? பாவிகளும் தங்களைச் சிநே கிக்கிறவர்களைச் சிநேகிக்கிறார்களே. தேவனாகிய கர்த்தர், புருஷனை குறித்து கொடுத்த பிரமாணத்திற்குள் நீ வாழ்வாயானாள் அவர் உன்மேல் பிரியமாயிருப்பார் என்று பதிலளித்தார். மனைவியானவளும், நித்திய ஜீவனாகிய கிருபையைச் சுதந்தரித்துக் கொள்ளுகிறவர்களான படியினால், அவர்களுடைய பெலவீனங்களின் நிமித்தம் அவர்களை சபித்து வெறுத்துவிடாமல், கிறிஸ்து உங்கள் மேல் நீடிய பொறுமை யுள்ளவர்களாக இருப்பது போல, உங்கள் நீடிய பொறுமையை அவர் கள் மேலே காண்பியுங்கள். தேவ ஆவியானவர் தாமே உங்களை நல் வழிப்படுத்தி நடத்துவாராக.

**எபேசியர் 5:25**

**புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்புகூருங்கள்**

**ஜெபம்**: நீடிய பொறுமையுள்ள தேவனே, தேவ சாயலிலே நாள்தோறும் பெருகும்படிக்கு என்னை அழைத்தீர். திவ்விய சுபாவங்களை நான் என் குடும்பத்திலே வெளிக்காட்டும்படிக்கு எனக்கு பெலன் தந்து என்னை நடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# அர்ப்பணிப்பும் கீழ்படிதலும்

கிறிஸ்துவுக்கு பிரியமாக நடக்க மனதாயிருக்கின்றவர்களுடைய வாழ்விலே அர்ப்பணிப்பும், பாடுகளை சகிப்பதும் இன்றியமையாதது. இது வீட்டிலே சொந்தக் குடும்பத்திலே ஆரம்பிக்கபட வேண்டும். அந்தப்படி மனைவிகளே, உங்கள் சொந்தப் புருஷர்களுக்குக் கீழ்ப்படிந்திருங்கள் என்று பரிசுத்த வேதாகமம் ஒரு எல்லையை மனைவிகளுக்கு அலங்காரமாக கொடுத்திருக்கின்றது. இந்த அர்ப்பணிப்பும், கீழ்படிதலும் புருஷனுடைய நற்குணாதிசயங்களுக்காக அவர்களுக்கு கொடுக்கப்படும் வெகுமதி அல்ல. அதாவது, என்னுடைய புருஷன் என்னை நேசிக்கின்றார். அவர் கடுமையாக உழைக்கின்றார். குடும்பத்தைப் பார்க்கின்றார் என்றபடியால் நான் அவரின் பிரயாசங்களுக்கு பதிலாக என்னை அர்ப்பணித்து, கீழ்படிந்திருப்பேன் என்பது பொருளல்ல. மனைவிகளே, உங்கள் சொந்தப் புருஷர்களுக்குக் கீழ்ப்படிந்திருங்கள் என்பது தேவன் மனைவிகளுக்கு கொடுத்த பிரமாணம். தேவனுடைய பிரமாணத்தை நிறைவேற்றும் பாதையிலே பாடுகள் உண்டு. மீட்பராகிய கிறிஸ்து நன்மை செய்து எப்படியாக பாடுகளை சகித்தாரோ அந்தப்படியே மனைவிகளும் தங்களை அர்ப்பணித்து, பாடுகளை சகிக்கும் போது, தேவனுடைய பிரமாணம் அவர்களில் நிறைவேறும். நாம் நம்மை ஆளுகின்ற நாட்டின் அதிகாரிகளுக்கும், நாம் வேலை செய்யும் இடத்திலுள்ள அதிகாரங்களுக்கும் கீழ்படிந்திருப்பதால், அவர்கள் செய்வது எல்லாம் சரி என்பது பொருள் அல்ல. நாம் எப்போதும் எல்லாவற்றிற்கும் மேலான அதிகாரமாகிய தேவனுக்கு உட்பட்டிருக்கின்றோம். அதனால், அவர் நிமித்தமாக இந்த பூமியிலுள்ள அதிகாரங்களுக்கு அவருக்குள் கீழ்படிகின்றோம். அதற்கு மேலாக, சொந்த புருஷன் மனம் மாறும்படியாகவும், அவன் தன் மனைவியின் அர்ப்பணிப்பையும் கீழ்ப்பதலையும் கண்டு, அவள் நிமித்தம் தேவனாகிய கர்த்தரை மகிமைப் படுத்தும்படிக்கு, அவள் புருஷனைக் குறித்த அன்போடு அவனுக்கு கீழ்படிந்திருக்க வேண்டும். ஒரு புருஷன் அநியாயக் காரணாகவே இருந்தால், அவன் அதற்குரிய பலனை அடைவான். உங்கள் புருஷன் அநியாயக் காரனணாக இருந்து அழிந்து போவதை நீங்கள் விரும்புகின்றீர்களா? அல்லது மனம் மாறி நித்திய ஜீவனை அடைய வேண்டும் என்று வாஞ் சிக்கின்றீர்களா? புருஷனை ஆதாயப்படுத்திக்கொள்ள விரும்பினால், கர்த்தர் குறித்த எல்லைக்குள் அலங்காரமாக அடங்கியிருங்கள்.

**1 பேதுரு 3:2**

**அந்தப்படி மனைவிகளே, உங்கள் சொந்தப் புருஷர் களுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்.**

**ஜெபம்**: நீதியுள்ள தேவனே, என் குடும்பத்திலே நான் சமாதானத்தை கெடுத்துப் போடுகின்றவனா(ளா)க அல்ல, கிறிஸ்துவைப் போல சமாதானத்தை உண்டு பண்ணுகின்றவனா(ளா)க வாழ கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

ஞாயிறு | ஆவணி 8 | 📖 மாலை வாசகம் – கலாத்தியர் 6:7–8

# நம்முடைய எல்லையை காட்டும் வேதம்

> **சங்கீதம் 119:1**
>
> **கர்த்தருடைய வேதத்தின்படி நடக்கிற உத்தம மார்க்கத்தார் பாக்கியவான்கள்.**

புருஷனுக்கும் மனைவிக்குமுரிய தேவ பிரமாணங்களைக் குறித்து கடந்த இரண்டு நாட்களாக தியானித்தோம். இன்னுமாய், பிள்ளைகள், வாலிபர்கள், வயோதிபர்கள், எஜமான்கள், ஊழியர்கள், அடிமைகள், அதிகாரிகள், போதகர்கள், விதவைகள், திக்கற்றவர்கள், ஒடுக்கப்பட்டோர், வாழ்விழந்தோர் யாவருக்குமுரிய தேவ பிரமாணங்களை நாம் சத்திய வேதத்திலே காணலாம். ஒவ்வொரு இடத்திலும் அன்பும், அர்ப்பணிப்பும், கீழ்படிதலும், பாடுகளை சகிப்பதும் குறிப்பிடப்பட்டிருப்பதைக் காணலாம். அதாவது, நான் யாராக இருந்தாலும், எந்த நிலையிலே இருந்தாலும், "அவன் எனக்கு செய்த தீமைக்கு தீமை செய்வேன்" என்ற எண்ணம் ஒரு மனிதனானவனுடைய எண்ணத்திலே இருக்கும் என் றால், அவனிடத்தில் தேவ அன்பு இன்னும் இல்லை. அவன், நன்மை செய்து கிறிஸ்து பாடுகளை அனுபவித்தது போல தன்னை இன்னும் அர்ப்பணிக்கவில்லை. அவன் வாழ்விலே அவன் தேவ வசனத்திற்கு கீழ்படிய வேண்டும் என்ற எண்ணம் இன்னும் இல்லை. பிரியமானவர்களே, தேவன் உங்கள் வாழ்க்கையில் குறித்த எல்லையை மாற்றாதிருங்கள். ஆண்டுகள் கடந்து உலக நாகரீகம் மாறிப் போகலாம். இப்போது எல்லாமே நவீனமயப்படுத்தப்ப ட்டிருக்கின்று என்று கூறலாம். ஆனால் தேவன் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராகவே இருக்கின்றார்.இந்த உலகிலே, தேவனுடைய பிரமாணங்கள் பல மனிதர்களுக்கு பைத்தியமாகவும், அநாகரீகமாகவும் தோன்றுகின்றது. தேவ ஞானத்திற்கு பதிலாக, உலக ஞானத்தையே மனிதர்கள் தெரிந்து கொள்கின்றார்கள். மனுஷனுக்குச் செம்மையாய்த் தோன்றுகிற வழி உண்டு அதின் முடிவோ மரண வழிகள். தேவனுடைய வசனம் ஒருபோதும் அவமாய் போவதில்லை. அவருடைய பரிசுத்தம் மாறிப்போவதில்லை. அவருடைய வசனம் ஒரு போதும் பெலனற்றுப் போவதில்லை. உங்கள் வாழ்க்கையிலே உங்களோடு தினமும் இடைப்படுகின்றவர்கள்: குடும்ப அங்கத்தவர்கள், சக தொழிலாளிகள், சக மாணவர்கள், நண்பர்கள், உறவினர்கள், அயலவர்கள், தேவ பிரமாணத் தைவிட்டு தவறிப்போவதால், நீங்களும் தேவ பிரமாணத்தையும், தேவன் உங்களுக்கு குறித்த எல்லையையும் தள்ளிப் போடாதிருங்கள். கர்த்தருடைய வேதத்தின்படி நடக்கிற உத்தமமார்க்கத்தார் பாக்கியவான்கள். அவர்கள் பரலோகத்திலே நித்திய ஜீவனை சுதந்தரித்துக் கொள்வார்கள்.

**ஜெபம்**: என்றும் மாறாத தேவனே, காலங்கள் மாறிப் போனாலும் உம்முடைய வாக்கு மாறிப் போவதில்லை. அடியேன் உம் வாக்கில் நிலைத்திருக்கும்படிக்கு பெலன் தந்து வழிநடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# அளவிட முடியாத பலன் உண்டு

தேவன் குறித்த எல்லைக்குள், தங்கள் வாழ்க்கையை காத்துக் கொள் கின்றவர்களுக்குரிய பலன் என்ன? இவர்கள்: கர்த்தருக்காய் காத்திரு க்கின்றவர்களாதலால் புது பெலடைந்து கழுகுகளைப்போலச் செட்டை களை அடித்து எழும்புவார்கள் அவர்கள் ஓடினாலும் இளைப்படையா ர்கள், நடந்தாலும் சோர்ந்துபோகார்கள். கர்த்தர் அருளிய வேதத்தில் தின மும் தியானமாக இருப்பதால், தமது வாழ்விலே நற்கனிகளை கொடு க்கின்றார்கள். அநித்தியமான இந்த பூவுல வாழ்க்கைக்கு ஒரு ஆரம்பமும் ஒரு முடிவும் உண்டு. ஒரு சந்ததி போகிறது, மறு சந்ததி வருகிறது. மனி தனுடைய ஆண்டுகளுக்கு ஒரு எல்லை உண்டு. இந்த பூமியிலே, பாடுகளோடு வாழும் மனிதன் அந்த தனக்கென தரப்பட்ட சொற்ப ஆண்டுகளை தேவனுடைய பிரணமானத்தின்படி காத் துக் கொள்வானாக இருந்தால், அவன் பரமனோடு பரலோகிலே நீடூழி யாய் வாழும் வாழ்க்கையை பெற்றுக்கொள்வான். நல்ல நிலத்திலே விதைக்கப்பட்ட விதைகள் பன்மடங்காக பலன் கொடுப்பது போல இவ ர்கள் அழிவுள்ளதை விதைத்து, அழியாமையை சுதந்தரித்துக் கொள்கின் றார்கள். நாம் அந்தப் பாக்கியத்தை பெற்றுக் கொள்ளும்படியாக, நம் பாவங்களுக் குரிய பரிகாரத்தை செலுத்தும்படி விலை மதிக்க முடியாத தம்முடைய இரத்தத்தை ஆண்டவராகிய இயேசு சிந்தினார். அகலமும், ஆழமும், நீளம், உயரமும் அறிய முடியாத, அறிவுக்கெட்டாத எல்லை யில்லாத உன்னத அன்பை அவர் நம்மேல் பொழிகின்றார். மேற்கு க்கும் கிழக்குக்கும் உள்ள தூரத்தை அளவிட முடியுமோ? அது எவ்வ ளவு தூரமோ, அவ்வளவு தூரமாய் அவர் நம்முடைய பாவங்களை நம்மைவிட்டு விலக்கினார். சொல்லிமுடியாத ஈவுகளை அவர் நமக்கு செய்திருக்கின்றார். எல்லாப் புத்திக்கும் மேலான தேவ சமாதானம் எங் கள் இருதயங்களையும் எங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்கு ள்ளாகக் காத்துக்கொள்ளும்படி செய்கின்றார். பூமிக்கு வானம் எவ்வளவு உயரமாயிருக்கிறதோ, அவருக்குப் பயப்படுகிறவர்கள்மேல் அவருடைய கிருபையும் அவ்வளவு பெரிதாயிருக்கிறது. நித்திய ஜீவனை அளிப்பேன் என்பதே அவர் நமக்குச் செய்த வாக்குத்தத்தம். தமக்காக காத்திருக்கின்றவர்களை தம்மோடு சேர்த்துக் கொள்ளும் படியாக ஆண்டவராகிய இயேசு மறுபடியும் வருவார். அவர் வெளிப் படும்போது நாம் அவர் வருகையில் அவருக்கு முன்பாக வெட்கப்பட்டு ப்போகாமல் தைரியமுள்ளவர்களாயிருக்கும்படிக்கு அவரில் நிலைத்தி ருப்போம். எனவே அவர் குறித்த எல்லையை மாற்றிப் போடாதிருங்கள்.

**1 யோவான் 2:25**

**நித்தியஜீவனை அளிப்பேன் என்பதே அவர் நமக்குச் செய்த வாக்குத்தத்தம்.**

**ஜெபம்:** நித்திய ஜீவனை தருவேன் என்று வாக்குரைத்த தேவனே, அழியாமையை பரலோகிலே தரித்துக் கொள்ளும்படிக்கு இந்த பூமியில் வாழும்வரை உம்முடைய வார்த்தையின் வழியில் வாழ கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழி யாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# நிலைத்திருந்து கனி கொடுங்கள்

தங்கள் பிள்ளைகளை நேசிக்கும் பெற்றோர் ஆண்டுகள் கடந்து சென்றாலும் தங்கள் பிள்ளைகளுக்கு புத்திமதிகளை கூறுவதிலும், தவறான காரியங்களைக் குறித்து எச்சரிப்பு வழங்குவதிலும், கண்டித்து பேசுவதிலும் சலிப்படைந்து போவதில்லை. ஆனால் பிள்ளைகளோ தங்கள் பெற்றோரின் புத்திமதிகளையும், எச்சரிப்பையும், கண்டிப்பையும் தினமும் கேட்பதால் "அதே குரல், ஒரே செய்தி" என்று சலிப்படைந்து போகின்றார்கள். இது பிள்ளைகளின் மனதிலேஒட்டிக் கொள்ளும் மதியீனம். மோசே என் னும் தேவ ஊழியரின் நாட்களிலே, மோசே வழியாக தேவனாகிய கர்த்தர் செய்த மகா பெரிதான அதிசயங்களை ஜனங்கள் கண்ணாரக் கண்டார்கள். ஆனால் நாட்கள் கடந்து செல்லும் போது, ஜனங்களில் சிலர் சபையை குழப்பும் கலகக்காரராக மாறி, தங்களுக்கென தலைவரை ஏற்படுத்திக் கொண்டார்கள். மோசேயோடு மட்டுமா தேவன் பேசுவார்? எங்களோடு பேச மாட்டாரா? மோசே ஜனங்களை தவறாக வழிநடத்துகின்றார் என்று பெரும் குழப்பத்தை ஏற்படுத்தினார்கள். அதனால் அவர்கள்மேல் தேவனுடைய கோபம் பற்றியெரிந்ததால், வனாந்தரத்திலே அழிந்து போனார்கள். பிரியமானவர்களே, நித்திய ஜீவனை தருவேன் என்பதே பிதாவாகிய தேவன் நமக்கு கொடுத்த வாக்குத்தத்தம். நாம் யாவரும் அதை பெற்றுக் கொள்ளும்படியாக நாளுக்கு நாள் தேவ சாயலிலே வளரந்து வருகின்றோம். நம்மை பக்திவிருத்தியடையச் செய்யும் தேவ செய்தியெல்லாம் அதைக் குறித்ததாகவே இருக்கும். உங்கள் சபையிலே, உங்கள் மேய்ப்பரின் குரலை வாரந்தோறும் கேட்கும் போது அதே குரல், ஒரே செய்தி என்று மதியீனமான பிள்ளைகளைப் போல சலிப்படைந்து போய்விடாதிருங்கள். தேவனுடைய வார்த்தையை நீங்கள் கேட்கும் போது அது உங்களுக்கு சலிப்பாக இருந்தால், உணர்வுள்ள இருதயத்தையும், பிரகாசமுள்ள மனக்கண்களையும் கர்த்தர் உங்களுக்கு தந்தருள வேண்டும் என்று வேண்டிக் கொள்ளுங்கள். புதிய வெளிப்பாடுகள் என்ற பெயரில், தந்திரமாக போதிக்கப்படுகின்ற பலவித காற்றினாலே அங்குமிங்குமாக அலைகளைப்போல அடிபட்டு அலைகிறவர்களாயிராமல், தேவ வார்த்தையின்படி நாளுக்கு நாள் கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலேயும், நீங்கள் வளர்ந்து பெருகுங்கள்.

**எபேசியர் 4:14**

மனுஷருடைய சூதும் வஞ்சிக்கிறதற்கேதுவான தந்திரமுமுள்ள போதகமாகிய பலவித காற்றினாலே அலைகளைப்போல அடிபட்டு அலைகிறவர்களாயிராமல்

**ஜெபம்**: வழிநடத்திச் செல்லும் அன்பின் தேவனே, என் சுய விருப்பப்படி, அங்குமிங்குமாக அலைந்து திரியாமல், கற்றுக் கொண்ட உம்முடைய வார்த்தைகளின்படி கனி கொடுக்கும் வாழ்க்கை வாழ கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# குறைகளிலே தரித்து நிற்காதிருங்கள்

ஒரு மாணவனானவனின் பாடசாலை முன்னேற்ற அறிக்கையிலிருந்த குறிப்பின்படி அவன் பெற்றோர்கள் வகுப்பாசிரியரை சந்திக்கும்படி சென்றிருந்தார்கள். அந்த மாணவன், பல பாடங்களிலே நல்ல புள்ளிகளை எடுத்திருந்த போதும் தாய் மொழியாகிய தமிழ்ப் பாடத்தில் மிகவும் குறைந்த புள்ளியையே அவன் பெற்றிருந்தான். வகுப்பாசிரியர் பெற்றோரை நோக்கி: அநேக பாடங்களிலே உங்கள் மகனானவன் சிறந்த புள்ளிகளை எடுத்திருக்கின்றான். எனது பாராட்டுளைத் தெரிவிக்கின்றேன். அவன் ஏனைய பாடங்களில் சிறந்து விளங்கினாலும், இந்த நாட்டின் கல்வி அமைச்சின் சட்டப்படி, தாய் மொழியில் சித்தி பெறாமல், மேற்படிப்பிற்கு செல்ல முடியாது. எனவே, தமிழ்ப் பாடத்தில் அதிக கரிசணை எடுக்கும்படி அறிவுரை கூறினார். ஒரு வேளை அந்தப் பெற்றோர், வகுப்பு ஆசிரியர் எங்கள் மகனின் குறைவைத் தான் நோக்கிப் பார்க்கின்றார் எனவே வேறு ஆசிரியரிடம் தங்கள் மகனை கொண்டு செல்லலாம் அல்லது படிக்கும் பாடசாலையை மாற்றி விடலாம் என எண்ணம் கொள்ளலாம். ஆனால் அவர்கள் எங்கு சென்றாலும், அவர்களுடைய மகன் மேற்படிப்பிற்கு தகுதி பெறும் பொருட்டு தமிழ்ப் பாடத்தில் சித்தி பெற்றே ஆக வேண்டும். பிரியமானவர்களே, இந்த சம்பவத்திலே குறிப்பிட்ட பிரகாரமாக, இன்று சபைகளிலே சிலர் தாங்கள் முன்னேற வேண்டிய இடங்களை காண்பிக்கும் ஊழியர்களையும், உடன் சகோதரர்களையும் எதிர்த்து நிற்கின்றார்கள். “என்னைக் குறித்த நல்லவைகளை மட்டும் பேசுங்கள் மற்றவைகளை விட்டுவிடுகள்” என்று சொல்லி சலிப்படைந்தும் கொள்கின்றார்கள். கேட் பதற்கு இனிமையாக இருக்கும் நல்ல காரியங்களை மட்டும் பேசலாமென நினைக்கின்றார்கள். ஆனால் ஒரு மனிதன் தன் ஆவிக்குரிய வாழ்விலே தான் முக்கியமாக கவனிக்க வேண்டிய ஒரு குறை அல்லது இடறல் உண்டு என்று அறிந்திருந்தும், அவன் அதை நியாயப்படுத்தி, தன்னை மாற்றிக் கொள்ளாமல், தன் குறைவுகளை காண்பிக்கும் வழிகாட்டிகளை மாற்றும்படி முயற்சி செய்பவனாக இருந்தால், வாழ்நாள் முழுவதும் அவன் பட்ட பிரயாசம் யாவும் விருதாவாய் போய் விடும். அப்படிப்பட்டவர்களுக்கு முடிவிலே நியாயத்தீர்ப்பும், விரோதிகளைப் பட்சிக்கும் கோபாக்கினையுமே இருக்கும் என வேதம் கூறுகின்றது.

**நீதிமொழிகள் 28:13**

**தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான். அவைகளை அறிக்கை செய்து விட்டுவிடுகிறவனோ இரக்கம் பெறுவான்.**

**ஜெபம்**: பாவத்திலிருந்த என்னை மீட்டுக் கொண்ட தேவனே, சத்தியத்தை அறிந்த பின்பும் துணிகரமாக பாவத்திலே நிற்கும் பெரும் பாதகத்திற்குள் நான் சிக்கிக் கொள்ளாதபடி என்னைக் காத்துக் கொள்ளும். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# ஆத்துமாவிற்கு இலாபம் என்ன?

ஒரு வியாபாரத்தை ஆரம்பிக்கும் ஒருவன் தன் வியாபாரத்திற்கு நஷ்டம் விளைவிக்கக்கூடிய காரணிகளை கண்டு கொண்டால் அவன் அதை விட்டுவிடுகின்றான். இந்த உலகிலே பொதுவாக மனிதர்கள் தாங்கள் முன்னெடுக்கும் திட்டங்கள் ஒவ்வொன்றிலும் இலாபத்தை அடையும்படி உழைக்கின்றார்கள். ஒரு வியாபாரத்தை ஆரம்பிக்கும் மனிதன் தனக்கு அதிக வாடிக்கையாளர்கள் வேண்டும் என்று பிரயாசப்படுகின்றான். விளையாட்டுப் போட்டிகளை நடத்துபவர்கள் பார்வையாளர்கள் வேண்டும் என்று அதற்குரிய நடவடிக்கைகளை எடுக்கின்றார்கள். அதுபோலவே, சபைகளிலே ஆத்துமாக்கள் பெருக வேண்டும் என்பதும் நம் எல்லோருடைய வாஞ்சையுமாக இருக்கின்றது. எடுத்துக்காட்டாக, ஒரு மனிதன் கையிட்டு செய்யும் தொழில் பெரிதாக விருத்தியடைந்து, அவனுக்கு பெரும் ஆதாயத்தை கொடுக்கின்றது. அவன் செல்லும் சபை ஐக்கியத்திலே ஜனங்கள் பெருகி, சபையானது வளர்ந்து தன்னிறைவு அடைந்திருக்கின்றது. இந்த உலகிலே அவன் தேவைகள் யாவும் சந்திக்கப்பட்டு வருகின்றது. அவனை காணும் மனிதர்கள் அவன் ஆசீர்வதிக்கப்பட்டவன் என்று கூறுகின்றார்கள். பூவுலகிலே ஒருவனுடைய வாழ்வு அப்படியிருப்பதால், அதனால் அவனுடைய ஆத்துமாவுக்கு இலாபம் என்ன? வளர்ந்து பெருகியிருக்கும் சபையில் அவன் அங்கத்தவனாக இருப்பதால், அவன் பரலோகம் சென்றுவிடக் கூடுமோ? இந்த உலகிலுள்ள மனிதர்கள் ஒருவனைப் பார்த்து ஆசீர்வதிக்கப்பட்டவன் நீ என்று கூறுவதால், அவன் தேவனுக்கு பிரியமுள்ளவனாக இருக்க முடியுமோ? ஒரு மனிதன் இந்த உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்தி, தனக்கு ஐசுவரியத்தையும், அந்தஸ்தையும், நற்பெயரையும் சேர்த்துக் கொண்டாலும், அவன் தேவனுடைய சித்தத்தை தன் வாழ்வில் நிறைவேற்றாதவனாக இருந்தால், அவன் தன் ஆத்துமாவுக்கு நஷ்டம் விளைவிக்கின்றவனாகவே இருப்பான். பிரியமானவர்களே, சற்று உங்கள் வாழ்க்கையை சிந்தித்துப் பாருங்கள். ஒருவனுடைய ஆத்துமாவிற்கு இலாபம் உண்டாக வேண்டுமென்றால், அவன் ஐசுவரியவானாக இருந்தாலும், வறியவனாக இருந்தாலும், அவன் தேவனுக்குப் பயந்து, உத்தம வழியிலே நடந்து, தேவ சித்தத்தை தன் சொந்த வாழ்விலே நிறைவேற்றுகின்றவனாக வாழ வேண்டும்.

**மாற்கு 8:36**

**மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக் கொண்டாலும், தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன?**

**ஜெபம்**: அன்பின் பரலோக தந்தையே, இந்த உலகத்தினாலே உண்டாகும் பெயரும் புகழையும் நாடாமல், தேவ பயத்துடன், உத்தமமாக நடந்து, உம்முடைய திருச்சித்தத்தை நிறைவேற்ற கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

வெள்ளி | ஆவணி 13 | 🕮 மாலை வாசகம் – ஆபகூக் 3:17–18

# ஜீவனை காத்துக் கொள்ளுங்கள்

ஒரு மனிதனானவன், தன் குடும்பத்தின் வறுமை எப்போது மாறும்? செழிப்பான வருடங்களைக் காண வேண்டும் என்று அனுதினமும் தேவ னிடம் வேண்டிக் கொண்டான். கடுமையாக உழைத்தான், தன் பிள்ளை கள் கல்வி கற்கும்படி தன்னால் முடிந்தளவு பிரயாசப்பட்டு அவர்களை ஊக்குவித்தான். ஆண்டுகள் கடந்து சென்றதும், அவன் செய்யும் தொழி லிலே விருத்தி ஏற்பட்டது. அவன் எதிர்பார்த்திருந்த செழிப்பின் வருட ங்களை கண்டு கொண்டான். கஷ்ட ங்கள் உருகும் பனிபோல மறைந்து போயிற்று. தேவன் என் வேண்டு தலைக் கேட்டு என்னை ஆசீர்வதித் திருக்கின்றார் என்று பெரும் மகிழ்ச்சி அடைந்தான். நாட்கள் கடந்து செல் லும் போது, அவன் தன்னை அறியா மலே,தனக்குண்டான செழிப்பை தான் இறுகப்பற்றியிருப்பதை அறியாது இருந்தான். சில மாதங்களுக்கு ஞாயிற்று கிழமைகளில் வேலை செய்ய வேண்டும் என்ற கட்டயாமும் அவனுக்கு ஏற்பட்டது. இலையென்று மறுத்தால் வேலை போய்விடும். வேலை போனால் என் வாழ்வின் செழி ப்பு போய்விடுமே என்று ஞாயிறு ஆராதனையை பொருட்படுத்தாது. வேலைக்கு செல்ல இணக்கம் தெரிவித்தான். வேதத்திலே காணும் பரிசு த்தவான்கள் தங்கள் ஆன்மீக இரட்சிப்பை காத்துக் கொள்ளும்படியாக தங்கள்உயிரையே அற்பமாக எண்ணி,எந்த தயக்கமுமின்றி உபத்திரவங் களையும், பாடுகளையும், இழப்புக்களையும் சகித்துக் கொண்டார்கள். ஆனால், இந்த மனிதனோ, தன் வேலையை காத்துக் கொள்ளும்படி தேவனுடைய காரியங்களைவிட்டுவிட ஆயத்தமுள்ளவனாக இருந்தான். பிரியமானவர்களே, வயல்கள் தானியத்தை விளைவியாமற்போனாலும், கிடையில் ஆட்டுமந்தைகள் முதலற்றுப்போனாலும், தொழுவத்திலே மாடு இல்லாமற்போனாலும், நான் கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பேன், என் இரட்சிப்பின் தேவனுக்குள் களிகூருவேன் என்று மனிதர்கள் அழகாக பாடுகின்றார்கள். ஆனால் அதே மனிதர்களே உயிர்வாழ எனக்கு இந்த உலக செல்வம் தேவை என்று நித்திய ஜீவனை இழந்து போக ஆயத்த முள்ளவர்களாக மாறிவிடுகின்றார்கள். நித்தியமானவைகளை பெற்றுக் கொள்ள விரும்பினால், அநித்தியமானவைகளை இழந்து போவதற்கு நாம் ஆயத்தமுள்ளவர்களாக இருக்க வேண்டும். நம் தேவைகளை நம் முடைய ஆத்தும நேசர் அறிவார் என்று அவரையே நாம் பற்றிக் கொண்டு வாழ வேண்டும்.

**லூக்கா 9:24**

**தன் ஜீவனை இரட்சிக்க விரும்புகிறவன் அதை இழந்துபோவான் என்னிமித்தமாகத் தன் ஜீவனை இழந்துபோகிறவன் அதை இரட்சித்துக்கொள்ளுவான்.**

**ஜெபம்:** சர்வ வல்ல தேவனே, உலக ஆசீர்வாதங்களை பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற நோக்கத்துடன் மட்டுமல்ல, உமக்காக அவைகளை இழந்து போகவும் நான் ஆயத்தமுள்ளவனாக இருக்க பெலன் தாரும். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

| சனி \| ஆவணி 14 | 📖 மாலை வாசகம் – யோவான் 16:13 |
|---|---|

# தேவனால் எல்லாம் கூடும்

ஒரு சமயம் ஒருவன் ஆண்டவராகிய இயேசுவினிடத்தில் ஓடிவந்து, அவருக்கு முன்பாக முழங்கால்படியிட்டு: நல்ல போதகரே நித்திய ஜீவனைச் சுதந்தரித்துக்கொள்ளும்படி நான் என்னசெய்யவேண்டும் என்று கேட்டான். விபசாரஞ்செய்யாதிருப்பாயாக, கொலை செய்யாதிருப்பாயாக, களவு செய்யாதிருப்பாயாக, பொய்ச்சாட்சி சொல்லாதிருப்பாயாக, வஞ்சனை செய்யாதிருப்பாயாக, உன் தகப்பனையும் உன் தாயையும் கனம் பண்ணுவாயாக என்கிற கற்பனைகளை அறிந்திருக்கிறாயே என்றார். அதற்கு அவன்: போதகரே, இவைகளையெல்லாம் என் சிறுவயதுமுதல் கைக்கொண்டிருக்கிறேன் என்றான். இயேசு அவனைப் பார்த்து, அவனிடத்தில் அன்புகூர்ந்து: உன்னிடத்தில் ஒரு குறைவு உண்டு: நீ போய், உனக்கு உண்டா னவைகளையெல்லாம் விற்று, தரித்திரருக்குக் கொடு, அப்பொழுது பரலோகத்திலே உனக்குப் பொக்கிஷம் உண்டாயிருக்கும் பின்பு சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றிவா என்றார். அவன் மிகுந்த ஆஸ்தியுள்ளவனாயிருந்தபடியால், இந்த வார்த்தையைக் கேட்டு, மனமடிந்து, துக்கத்தோடே போய்விட்டான். பாருங்கள், நித்திய ஜீவனை பெற வேண்டும் என்ற ஆசை அவனிடத்திலிருந்தது. ஆனால், அவனிடமிருந்த ஐசுவரியத்தின் ஆசை நித்திய ஜீவனைவிட மிக அதிகமாக இருந்ததால் அவன் ஆசை அவனை மேற்கொண்டது. ஆண்டவராகிய இயேசுவை சந்தித்த எல்லா ஐசுவரியவான்களையும் பார்த்து அவர் உனக்கு உண்டானவைகளையெல்லாம் விற்று, தரித்திரருக்குக் கொடு என்று கூறவில்லை. ஆனால் இந்த மனிதனுக்கு அது இடறலாக இருப்பதை அவர் அறிந்து கொண்டார். ஒருவேளை விபசாரம், கொலை, களவு, பொய்சாட்சி, வஞ்சனை உங்கள் வாழ்வில் இல்லாதிருக்கலாம். நீங்கள் உங்கள் தாய் தந்தையரை கனம்பண்ணி அவர்களுக்கு செய்ய வேண்டியவைகளை செய்து வரலாம். ஆனால், உங்கள் மனதை மேற்கொண்டிருக்கும் ஆசை என்ன? நித்திய ஜீவனே உங்கள் மேலான ஆசையாக இருக்க வேண்டும். அப்படியானால் யார்தான் நித்திய ஜீவனை பெற்றுக் கொள்வான் என்று அன்று இயேசுவின் சீஷர்கள் ஆச்சரியப்பட்டார்கள். மனித பெலனத்தினால் அது ஆகாது ஆனால் தேவனுடைய பெலத்தினால் அது ஆகும் என்று இயேசு அவர்களை உற்சாகப்படுத்தினார். எனவே தேவ ஆவியின் பெலத்தோடு முன்னேறிச் செல்வோம்.

**மாற்கு 10:27**

**மனுஷரால் இது கூடாதது தான், தேவனால் இது கூடாததல்ல தேவனாலே எல்லாம் கூடும் என்றார்.**

**ஜெபம்**: நித்திய ஜீவனை தருவேன் என்ற தேவனே, என்னுடைய பெலத்தினால் ஒன்றும் ஆகாது, என் பெலவீனங்களை நான் மேற்கொள்ளும்படி தேவ பெலனத்தினால் என்னை நீர் வழிநடத்துவீராக.. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# சத்திய ஆவியானவர் வழிநடத்துவார்

**யோவான் 16:13**

**சத்திய ஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்**

“தேவ சாயலாக மாறி தேவனோடிருப்பேன்” என்று ஒரு அழகான பாடலின் வரிகள் அமைக்கப்பட்டிருக்கின்றது. ஆதியிலே தேவனானவர், தம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார், அவனைத் தேவசாயலாகவே சிருஷ்டித்தார் ஆணும் பெண்ணுமாக அவர்களைச் சிருஷ்டித்தார். ஆனால் மனிதனோ, தேவனுடைய வார்த்தைக்கு கீழ்படியாமல் தேவ சாயலை இழந்து போனான். தேவ சாயலை இழந்து போவதற்கு அவன் தன் மாம்சத்தின் இச்சைக்கு இடங்கொடுத்தான். இழந்து போன அந்த தேவ சாயலை மறுபடியும் பெற்றுக் கொள்ளாமல் நாம் தேவனோடு பரலோகிலே வாழ முடியாது. அந்த தேவசாயலை அடைந்து கொள்ளும்படிக்கு, ஆண்டவராகிய இயேசு வழியைத் திறந்தார். அந்த வழியாக பிரவேசித்து, ஆன்மீக இரட்சிப்பை பெற்றுக் கொண்டு, அவருடைய சித்தம் செய்பவர்கள் தேவ சாயலிலே தினமும் வளர்ந்து வருகின்றார்கள். தேவ வார்த்தைக்குகீழ்ப்படியாமல் இழந்த தேவசாயலை, நாம் தேவ வார்த்தைக்கு கீழ்ப்படிவதினால் மறுபடியும் பெற்றுக் கொள்ளலாம். தேவ சாயலை இழந்து போகும் மனிதர்கள் இந்த உலகத்தின் மாம்ச இச்சைக்கு அடிமைகளாக இருக்கின்றார்கள். அவர்களுடைய மனதிலே, பகை, வன்மம், கசப்பு, பிரிவினைகள், சண்டைகள், மார்க்கபேதங்கள், மோக இச்சைகள், களவு, பொய், பொருளாசை, தகாத வார்த்தைகள், களியாட்டங்கள், வெறி கொள்ளுதல் போன்ற மாம்சத்தின் சுபாவங்கள் இருக்கும். அவைகளை தன் இருதயத்திலே வைத்திருக்கும் மனிதன் தேவ சாயலிலே ஒருநாளும் வளரமுடியாது. தேவ சாயலை அடைய விரும்புகின்றவன், இவைகளை விட்டுவிட ஆயத்தமுள்ளவனாக இருக்க வேண்டும். நீங்கள் ஒரு குற்றமும் செய்யாதிருக்க உங்களுக்கு தீமை செய்தவர்கள் உங்கள் வாழ்விலே இருப்பார்கள். அவர்களை குறித்த உங்கள் மனநிலை எப்படியாக இருக்கின்றது. அவர்களை குறித்த கசப்பு உங்கள் மனதில் இருக்கின்றதா? உங்களுக்கு தீமை செய்தவர்களை ஆசீர்வதித்து அவர்களுக்காக ஜெபிக்கும் மனநிலை உங்களிடம் உண்டா? மனித பெலத்தால் இவைகளை செய்ய முடியாது. சத்திய ஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார் என்று ஆண்டவராகிய இயேசு கூறியிருக்கின்றார். அவருடைய துணையோடு தேவ சாயலிலே தினமும் வளருங்கள்.

**ஜெபம்**: உன்னதமான தேவனே, தேவ சாயலிலே நான் அனுதினமும் வளர்ந்து பெருகும்படிக்கு, மாம்சத்தின் கிரியைகள் என்னை மேற்கொள்ளாதபடிக்கு, எனக்கு பெலன் தந்து வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# தாழ்மையும் கீழ்ப்படிவும்

ஒரு வீட்டின் சொந்தக்காரன் தன் வீட்டிற்கு முன்பாக அழகான ஒரு பூந்தோட்டத்தை வைத்திருந்தான். அவ்வழியாய் போய் வருபவர்கள் அந்தப் பூந்தோட்டத்தை பார்த்து அதன் அழகை இரசிப்பார்கள். சிலர் வீட்டுச் சொந்தக் காரனின் அனுமதியோடு மலர்களை பறித்துச் சென்றார்கள். தனக்கு பிரியமானவர்களுக்கு அவன் அவைகளை கொடுத்தான். ஆனால் சில நாட்களுக்கு பின்பு, அத்தோட்டத்திலிருந்த மலர்களை சிலர் அனுமதியின்றி பறித்துக் கொண்டு செல்வதை அவன் அவதானித்தான். அது அந்த வீட்டுச் சொந்தக்காரனுக்கு விசனமாக இருந்தது. அப்படிப்பட்டவர்களிடமிருந்து தன் தோட்டத்தின் மலர்களை பாதுகாக்க பல வழிமுறைகளை செய்தும் பலனளிக்கவில்லை. அதனால் அவன் "உனக்கும் இல்லை, எனக்கும் இல்லை" என்று தன் வீட்டிற்கு முன் இருந்த தோட்டத்தை அகற்றிவிட்டு, யாரும் உட்புகாதபடிக்கு முள்வேலியால் இடத்தை அடைத்துப் போட்டான். ஒரு சில மனிதர்களின் பிரியமற்ற செயல்களால் அவன் தன் வீட்டின் அழகை கெடுத்துவிட்டான். இது போலவே, நம் இருதயமாகிய தோட்டத்திலே, திவ்விய சுபாவங்கள் அழகான மலர்களை போல இருக்கின்றது. சிலர் தமக்கு வேண்டியவர்களுக்கு பிரியத்துடன் பிரியமானதை வெளிப்படுத்துகின்றார்கள். தமக்கு இஷ்டமானவர்களுக்கு நற்கிரியைகளை தாராளமாக செய்து வருவார்கள். ஆனால், தற்போது தம்மை சூழவுள்ள வஞ்சனையுள்ள மனிதர்கள் இவர்களின் நற்கிரியைகளை தகாதவிதமாக பயன்படுத்திக் கொள்வதால், விசனமடைந்து விடுகின்றார்கள். அதை தடுத்து நிறுத்து வதற்கு பல வழிமுறைகளையும், சட்டதிட்டங்களையும் போட்டுக் கொள்கின்றார்கள். அவை பலனளிக்காதவிடத்து, தங்களிலிருந்து திவ்விய சுபாவங்களை அப்படியே விட்டுவிட்டு, யாரும் தங்களிடம் நெருங்கி தயவு கேட்காதபடிக்கு முள்வேலிகள் போன்ற சுபாவங்களை வெளிக்காட்டும்படி முயல்கின்றார்கள். பிரியமானவர்களிளே, சில மனிதர்களின் இப்படிப்பட்ட வஞ்சகமான செயல்களினால் நீங்கள் தேவனுடைய பிள்ளைகள் என்பதை மறந்து போய்விடாதிருங்கள். இந்த உலகிலே, மனிதர்கள் தேவ கிருபையை அசட்டை செய்கின்றார்கள். அதனால் தேவன் தம் கிருபையை பொழிவதை நிறுத்திவிடவில்லை. நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கின்றீர்கள். உப்பு அதன் சாரத்தை இழந்து போனால் அது நிலத்துக்காகிலும் எருவுக்காகிலும் உதவாது, அதை வெளியே கொட்டிப்போடுவார்கள்.

**லூக்கா 14:34**

உப்பு நல்லதுதான், உப்பு சாரமற்றுப்போனால் எதினால் சாரமாக்கப்படும்?

**ஜெபம்**: பரிசுத்தமுள்ள பிதாவே, இந்த உலகிலே எங்களை சூழ உள்ள மனிதர்களின் தவறான நடக்கைகளால் நான் என் பரிசுத்தத்தின் அலங்காரத்தை குலைத்துப் போடாதபடிக்கு என்னைக் காத்துக் கொள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# இருதயமாகிய நல்ல பொக்கிஷம்

தீண்டுகின்ற ஒரு சர்ப்பமானது எந்த மனுஷனைக் கண்டாலும் விதிவில க்கின்றி தீண்டும். இது அதன் இயற்கை சுபாவம். நிழல் கொடுக்கும் மரமானது அதன் கீழ் ஒதுங்கும் யாவருக்கும் நிழல் கொடுக்கும். நீ அரசன் என் நிழலில் வரலாம், நீ ஏழை என் நிழலில் ஒதுங்க முடியாது, உயர்ந்தவன், தாழ்ந்தவன், கெட்டவன், நல்லவன் என்று அது எந்த வேற்றுமையையும் காண்பிப்பதில்லை. அதன் நிழலிலே ஒதுங்கும் யாவருக் கும் அது ஆறுதலாக இருக்கும். நல்ல ஊற்றிலிருந்து வரும் தண்ணீர் அதை பருகும் யாவருக்கும் தாகத்தை தீர்க் கும். ஒரே ஊற்றுக்கண்ணிலிருந்து தித் திப்பும் கசப்புமான தண்ணீர் சுரக்குமா? அத்திமரம் ஒலிவப்பழங்களையும், திரா ட்சச்செடி அத்திப்பழங்களையும் கொடுக்குமா? அப்படியே உவர்ப்பான நீரூற்றுத் தித்திப்பான ஜலத்தைக் கொடுக்கமாட்டாது. இயேசு சொன் னார்: வேதவாக்கியம் சொல்லுகிறபடி என்னிடத்தில் விசுவாசமாயிருக்கி றவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும் என்றார். அப்படியானால், ஒருவனுடைய உள்ளத்திலிருந்து தித்தி ப்பும் கசப்பும் புறப்படுமாக இருந்தால், அவன் இருதயத்திலே இருப்பது என்ன? அங்கே திவ்விய சுபாவத்தின் ஒரே ஊற்றுகண் மட்டுமல்ல, அங்கே வேறு ஊற்றுக்கண்களும் உண்டு. பிரியமானவர்களே, நன்மை செய்வதிலே சோர்ந்து போகாதிருங்கள். சில மனிதர்கள் ஏழைகளைப் போல வேஷம் பூண்டு, மற்றவர்களை ஏமாற்றி பணம் சம்பாதித்துக் கொள்கின்றார்கள். அது அவர்களுடைய ஏமாற்றும் சுபாவம். ஆனால், ஏழைகள் யாவரும் ஏமாற்றுகின்றவர்கள் என நினைத்து நாம் தான தர்மங்களை விட்டுவிட்டால், நம்முடைய திவ்விய சுபாவமும் தணிந்து போய்விடும். சிலர் உங்கள் வாழ்க்கையிலே துரோகம் செய்துவிட்டா ர்கள் என்று உங்கள் மன்னிக்கும் சுபாவத்திற்கு ஒரு முற்றுப்புள்ளி வைப்பது தேவ வார்த்தையின்படி சரியாகுமோ? உங்கள் பிதாவாகிய தேவன் இரக்கத்தில் செல்வந்தவராக இருக்கும் போது, நீங்கள் இரக்க த்திலே கஞ்சத்தனமுள்ளவர்களாக இருப்பது எப்படி? நல்ல மனுஷன் தன் இருதயமாகிய நல்ல பொக்கிஷத்திலிருந்து நல்லதை எடுத்துக் காட்டுகிறான் பொல்லாத மனுஷன்தன் இருதயமாகிய பொல்லாத பொக் கிஷத்திலிருந்து பொல்லாததை எடுத்துக்காட்டுகிறான். பிரியமானவர் களே, நீங்கள் வானம் பூமி படைத்த பிதாவாகிய தேவனுடைய பிள்ளை கள் என்பதை ஒருபோதும் மறந்து விடாதிருங்கள்.

**லூக்கா 6:45**

நல்ல மனுஷன் தன் இருதயமாகிய நல்ல பொக்கிஷத்திலிருந்து நல்லதை எடுத்துக் காட்டுகிறான்

**ஜெபம்**: பூரண சற்குணராயிருக்கின்ற பரலோக பிதாவே, திவ்விய சுபாவத்திற்கு பங்காளியாக என்னை அழைத்தவரே, எந்த சூழ்நிலையிலும் நான் அதை வெளிக்காட்டும்படிக்கு எனக்கு பெலன் தாரும். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# கிருபையின் நாட்கள்

ஒரு வயலின் சொந்தக்காரன் தன் வயலிலே வேலை செய்யும்படிக்கு அந்த ஊரிலுள்ள மனிதர்களை தெரிந்தெடுத்தான். அவர்கள் யாவரும் கடுமையாக உழைத்து தங்கள் வேலைகளை செய்து முடித்தார்கள். வயலின் சொந்தக்காரனானவன், முன்குறித்த கூலியை அவர்கள் யாவருக்கும் கொடுத்து அனுப்பினான். அவர்களில் சிலர் கிடைத்த கூலியை எடுத்து தங்கள் தேவைகளுக்காக பயன்படுத்தினார்கள். வேறு சிலர், தங்கள் ஆசைகளையும் களியாட்டங்களையும் நிறைவேற்றுவதற்காக பயன்படுத்தினார்கள். இன்னும் சிலர், வாழ்வில் பல தேவைகள் இருந்த போதும், ஒரு சிறிய பங்கை தேவனுக்கும், இன்னுமொரு சிறிய பங்கை ஏழைகளுக்கும் பிரித்து வைத்துவிட்டு, மிகுதியானவைகளை தங்கள் அனுதின தேவைகளை சந்திப்பதற்கு பயன்படுத்தினார்கள். இவர்களில் யார் உங்கள் மனத்திற்கு பிரியமாக இருக்கின்றார்கள்? யார் தேவனுடைய பார்வையிலே பிரியமுள்ளவர்களாக இருப்பார்கள்? யார் பரலோகத்திலே பொக்கிஷங்களை சேர்த்து வைக்கின்றார்கள்? இந்த சம்பவத்தை மையமாக வைத்து இரண்டு காரியங்களை சிந்தித்துப் பாருங்கள். 1. தேவனாகிய கர்த்தர்தாமே, ஒருவனும் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு இந்த உலகிலே யாவர்மேலும் கிருபையை பொழிகின்றார். அதை பெற்றுக் கொள்ளும் மனிதன், தான் உயிரோடிருக்கும் நாட்களிலே அதை எப்படி பயன்படுத்துகின்றான் என்பதை அவனவன் சிந்தித்துப் பார்க்க வேண்டும். 2. இந்த உலகிலே, உங்கள் மத்தியிலே வாழும் மனிதர்கள் தாம் பெற்றிருக்கும் கிருபையை, தங்கள் விருப்பப்படி செலவு செய்யலாம். அதனால் நீங்கள் சோர்ந்து போகாதிருங்கள். உங்கள் கண்களை அவர்கள் நடக்கையின்மேல் பதிய வைக்காமல் ஆண்டவராகிய இயேசுவின் மேல் பதிய வைத்து அவர் காட்டிய வழியிலே வாழுங்கள். "என் சித்தத்தின்படியல்ல, என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்யவே நான் வானத்திலிருந்திறங்கி வந்தேன்." என்று நம் ஆண்டவராகிய இயேசு கூறினார். அநியாயங்களும் அநீதிகளும் நிறைந்த உலகிலே ஆண்டவராகிய இயேசு பல நிந்தைகள், போராட்டங்கள், பாடுகள் மத்தியிலும், மற்றவர்களைப் போல வாழாமல், மற்றவர்கள் மீட்படைய வேண்டும் என்ற மனதுடன், தன்னை தியாகமாக ஒப்புக்கொடுத்தார். அதுபோலலே நாமும், நம்முடைய வாழ்வில் தேவனுக்கு பிரியமானவைகளை செய்வோம்.

**யோவான் 6:38**

**என் சித்தத்தின்படியல்ல, என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்யவே நான் வானத்திலிருந்திறங்கி வந்தேன்.**

**ஜெபம்**: கிருபையை பொழியும் தேவனே, நீர் எனக்கு தந்திருக்கும் கொஞ்சத்திலே நான் உண்மையுள்ளவனாக இருந்து, உம்முடைய திருச்சித்தத்தை என் வாழ்வில் நிறைவேற்ற கிருபை செய்வீராக. இரட்சகர்இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# கடின இருதயம் வேண்டாம்

பேதுரு என்னும் சீஷன் ஆண்டவர் இயேசுவால் மிகவும் கடுமையாக கடிந்து கொள்ளப்பட்டவன். அதுமட்டுமல்லால், தன் ஆண்டவரை தன க்குத் தெரியாது என்று, பலர் முன்னிலையிலே, இயேசுவை மறுதலித்த வன். ஆனால் எல்லா சந்தர்ப்பங்களிலும் தன் மனதை கடினப்படுத்திக் கொள்ளாமல் இயேசுவை அண்டிக் கொண்டான். நான் உம்மைவிட்டு எங்கே போவேன் என்று அறிக்கையி ட்டான். தன் குற்றங்களுக்காக மனங் கசந்து அழுதான். நியாயதிபதிகள் இஸ்ரவேலிலே இருந்த நாட்களிலே, சவுல் என்னும் ஒரு மனிதனை, தேவன் பிரித்தெடுத்து, அவனை இஸ்ரவேலின் ராஜாவாக உயர்த்தினார். அவன் கர்த்தரை அறிந்திருந்தும், தான் குற்றங்கள் செய்யும் போது, அதை ஏற்றுக் கொள்ள மனதில்லாமல் தன் செய்கைகளை நியாயப் படுத்தினான். கர்த்தராகிய இயேசு இந்த உலகத்திலே இருந்த நாட்களிலே, தாங்கள் கர்த்தரை அறிந்தவர்கள் என்று கூறிய மதத்தலைவர்கள், இயேசு அவர்கள் குற்றங்களை குறித்து பேசும்போது, கடுங் கோபங்கொண்டு, தங்கள் மனதை கடினப்படுத்திக் கொண்டு, கர்த்தரை குற்றம் சாட்டினார்கள். இவர்களில் கர்த்தர் யார்மேல் பிரியமாக இருந்தார்? தன்னுடைய சீஷனாகிய பேதுருவின் மேலே அவர் பிரியமாக இருந்தார். மேற்கூறிய மூன்று சம்பவங்களிலும் தங்கள் குணாதிசயங்களை வெளிக்காட்டிய மனிதர்கள் தேவனைக் குறித்து நன்கு அறிந்தவர்களாக இருந்தார்கள். இன்றும் தேவனை அறிந்திருக்கின்றோம் என்று கூறும் மனிதர்களும் மேற்கூறிய மனிதர் களைப் போலவே இருக்கின்றார்கள். தங்களைப் குறித்ததான, தேவ னாகிய கர்த்தருடைய கண்டிப்பின் வார்த்தைகளை கேட்கும் போது சிலர் பேதுருவைப் போல மனம் திரும்பி இயேசுவை இன்னும் அதிக மாக அண்டிக் கொள்கின்றார்கள், வேறு சிலர், மனதைக் கடினப்படுத்தி னவர்களாக சவுல் ராஜாவைப் போல தங்கள் நிலையை நியாயப்ப டுத்துகின்றார்கள். இன்னும் சிலர் அன்றிருந்த மதத்தலைவர்களைப் போல, தேவ வார்த்தைகளை எடுத்துக் கூறுபவர்களின் மேல் கடும் கோபம் கொண்டு, தேவனை அறியாதவர்கள்கூட செய்யாத அநியாய ங்கைள செய்து விடுகின்றார்கள். பிரியமானவர்களே, கர்த்தருடைய வார்த்தையானது பேசப்படும் போது, அதன்படி உங்கள் வாழ்வில் சில காரியங்கள் மாற்றப்பட வேண்டும் என்றால், பேசுகின்றவர்மேல் கோபம் கொள்ளாமல், கர்த்தருடைய வார்த்தையின்படி உங்கள் வாழ்க்கையை மாற்றிக் கொள்ள உங்களை அவரிடம் ஒப்புக் கொடுங்கள்.

**எபிரெயர் 3:8**

**உங்கள் இருதயங்களைக் கடினப்படுத்தாதிருங்கள்.**

**ஜெபம்**: வார்த்தையை அனுப்பி குணமாக்குவேன் என்ற தேவனே, உம்முடைய வார்த்தையை நான் கேட்கும்போது நான் இறுமாப்படை யாமல்,பேதுருவைப்போல உம்மைப் பற்றிக் கொள்ள கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# ஆழமான வேத அறிவு?

ஒரு சுகாதார திணைக்களத்திலே அதிகாரியாக வேலை பாரக்கும் ஒரு மனிதனானவன், பிறந்தின தின விழாவொன்றிலே சமுகம் தந்திருந்த சில நண்பர்கள் அயலவர்களோடு தன் வேலையைக் குறித்து பேசிக் கொண் டிருந்தான். சில உணவுச் சாலைகள் சுகாதரத்தை பேணுவதில்லை. அப்படியாக சுகாதாரமற்றதும், பொது மக்களை பாதிக்கும் வியாபார நிலை யங்களை எப்படியாக இணங்கண்டு, அவர்களுக்குரிய அபராதத்தை விதி க்கின்றோம் என்று கேட்டுக் கொண் டிருந்தவர்கள் ஆச்சரியப்படும்படி விளக்கிக் கூறினான். மிகவும் அரு மையாகவும் தான் பேசுகின்ற காரிய த்தைக்குறித்து அறிவுள்ளவனாகவும் அவன் காணப்பட்டான். அங்கிரு ந்த யாவரும் அவன் செய்யும் தொழி லையும் அதன் பயன்பாட்டையும் குறித்து மெச்சிக் கொண்டார்கள். சற்று நேரம் கழிந்த பின்பு, அதே மனிதனானவன் புகைப்பதாலும், மதுபானம் அருந்துவதாலும், தனி மனிதனுக்கும், குடும்பத்திற்கும், சமுகத்திற்கும் ஏற்படும் பாதிப்பைக் குறித்து பேச ஆரம்பித்த போது, அவ்விடத்திலி ருதவர்கள் பலர், இவன் புறம்போக்கானவன் என்று அந்த இடத்தை விட்டு சென்று விட்டார்கள். பிரியமானவர்களே, இன்று பலருடைய நிலைமை இப்படியாகத்தான் இருக்கின்றது. அதாவது, வேதத்தைக் குறித்தும், அதன் அதிசயத்தை குறித்தும் ஆழமாக பேசுங்கள். நோவா, யோசேப்பு, தானியேல், யோபு, தாவீது, ஸ்தேவான் மற்றும் யோசபேல், யூதாஸ், அனனினா சப்பிராள் போன்ற பல பாத்திரங்களைக் குறித்து தாராளமாக பேசுங்கள் ஆனால் என்னுடைய தனிப்பட்ட வாழ்க்கைக்குள் வேத வார்த்தைகளை புகுத்த வரவேண்டாம் என்று கூறிக் கொள்கின் றார்கள். வேதத்தை ஆழமாக கற்றுக் கொள்ள வேண்டும். "உன்னைப் போல உன் அயலானையும் நேசி" இது யாரால், யாருக்கு, எப்போது கூறப்பட்டது என்பதை அறிந்து கொள்ள வேண்டும் என்ற ஆவல் பெரியது. ஆனால் உன் பக்கத்து வீட்டுக் காரனை பழி வாங்காமல், மன்னித்துவிட வேண்டும் என்று கூறுவதை கேட்கவும், சிந்திக்கவும் விருப்பமுமில்லை, நேரமுமில்லை. நாம் அப்படியிருத்தலாகாது. வேத த்தை நாம் வாசிக்கும் போது, அந்த வார்த்தைகளுடன் நம்முடைய வாழ்வை குறித்த தியானமும் அதனுடன் இசைந்திருக்க வேண்டும். இப்படியாக நாளுக்கு நாள் நம்முடைய வாழ்வு மறுரூபமாக வேண்டும்.

**2 தீமோத்தேயு 3:17**

**அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும் சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது.**

**ஜெபம்**: உங்களை நீங்களே சோதித்து அறியுங்கள் என்ற தேவனே, உம்முடைய வசனம் எப்போதும் என் வாழவின் வெளிச்சமாக இருக்கும் படிக்கு பிரகாசமுள்ள மனக் கண்களைத் தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

சனி | ஆவணி 21

📖 மாலை வாசகம் – ஏசாயா 14:24

# சுய பிரமாணங்களா தேவ பிரமாணங்களா?

ஒரு வீட்டின் சொந்தக் காரன் தன் வீட்டின் கதவுகளையும், ஜன்னல்களையும் அதன் நிலைகளிலே பூட்டும்படியாக ஒரு தச்சனை கூப்பிட்டிருந்தான். அந்த மனிதனானவன் தச்சனை நோக்கி: இந்த அழகான வேலைப்பாடுகலுள்ள கதவுகளையும், ஜன்னல்களையும் நீ அதன் நிலைகளிலே பூட்டி விடு என்று கூறினான். கதவுகளையும், ஜன்னல்களையும் அதன் நிலைகளையும் அளவெடுத்த தச்சன் கதவுகளும், ஜன்னல்களும் அதன் நிலைகளிலே சரியாக பொருந்தாதிருப்பதை கண்டு கொண்டான். அவன் அந்த வீட்டு சொந்தக்காரனை நோக்கி: ஐயா, இந்த கதவுகளும், ஜன்னல்களும், உங்கள் வீட்டிலே போட்டிருக்கும் கதவு, ஜன்னல் நிலைகளின் கட்டமைப்புக்கு செய்யப்படவில்லை. இந்தக் கதவுகளும் ஜன்னல்களும் நிலைகளின் கட்டமைப்புக்கு பொருந்தாது. அதே வேளையில் இந்த கதவுகளையும் ஜன்னல் கதவுகளையும் சற்று வெட்டினால் அதன் வேலைப்பாடுகள் பாதிக்கப்படும் என்று கூறினான். அதற்கு அந்த வீட்டுக்காரன்: அது எனக்குத் தெரியும், நீ எப்படியாவது, அந்தக் கதவுகளையும் ஜன்னல்களையும் வெட்டாமல், வீட்டின் நிலைகளின் கட்டடமைப்புகளை கதவுகளின் அளவுப்பிரமாணத்திற்கு அமைய வெட்டி, எப்படியாவது கதவுகளை நிலைகளில் பூட்டி விடு என்று கூறனான். பிரியமானவர்களே, வீட்டின் நிலைகளின் கட்டமைப்பின் அளப்பிரமாணத்திற்கு ஏற்றபடி கதவுகளை வாங்குவதா? அல்லது அளவுப் பிரமாணமற்ற கதவுகளை வாங்கி, வீட்டின் நிலைகளின் கட்டமைப்பை மாற்றுவதா? நித்திய ஜீவனைத் தரும் தேவ பிரமாணங்களாகிய அளவுப் பிரமாணத்தின்படி நம்முடைய வாழ்க்கையை மாற்றியமைப்பதா? அல்லது நம்முடைய வாழ்க்கைக்கு ஏற்றதாக தேவ பிரமாணங்களை மாற்றிக் கொள்வதா? சற்று சிந்தித்துப் பாருங்கள். இன்று மனிதர்கள் தங்கள் வாழ்க்கைக்கு ஏற்றபடியான சபையையும், தங்கள் வாழ்க்கை முறைமைகளுக்கு ஏற்றபடி போதிக்கும் ஊழியர்களையும், தங்கள் வாழ்வின் முறைமைகளை ஆதரிக்கும் சக விசுவாசிகளையும் தேடுகின்றார்கள். சற்று சிந்தித்துப் பாருங்கள். தேவனுடைய வார்த்தையை யாரால் மாற்ற முடியும்? அவருடைய நியமங்களை வியர்த்தமாக்கக்கூடியவன் யார்? ஒருவரும் அதை செய்யக் கூடாது. எனவே, அழிந்து போகாதபடிக்கு தேவனுடைய பிரமாணங்களின்படி உங்கள் வாழ்க்கையை மாற்றியமைத்துக் கொள்ளுங்கள்.

**2 நாளாகமம் 20:6**

உம்முடைய கரத்திலே வல்லமையும் பராக்கிரமமும் இருக்கிறது, ஒருவரும் உம்மோடு எதிர்த்து நிற்கக்கூடாது.

**ஜெபம்**: நித்திய ஜீவ வார்த்தைகளை எமக்குத் தந்த தேவனே, அந்த வார்த்தைகளை நான் பற்றிக் கொண்டு அதன்படி என் வாழ்க்கை முறைமைகளை மாற்றிக் கொள்ள உணர்வுள்ள இருதயத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

ஞாயிறு | ஆவணி 22

📖 மாலை வாசகம் – நீதிமொழிகள் 1:7

# வாழ்வின் முக்கிய தீர்மானங்கள்

ஒரு வாலிபனானவன் தான் விரும்பிய பெண்ணொருத்தியை திருமணம் செய்துகொள்ளும்படியாகஇருவரும் திருமணப்பதிவை ஒழுங்கு படுத்தும்படி சென்றிருந்தார்கள். அவர்கள் வசிக்கும் நாட்டின் சட்டப்படி அவர்கள் திருமணப்பதிவு செய்வதற்கு முன்பாக சில ஒழுங்கு முறைகளை பின்பற்ற வேண்டும் என்று சட்டஅதிகாரி ஒருவர் அறிவுரை கூறினார். மறு பேச்சு இல்லாமல் அவர்கள் அந்த ஒழுங்கு முறைகள் யாவையும் செய்து முடித்தார்கள். திருமண விழாவிற்குரிய ஆயத்தங்களை செய்ய முற்பட்ட போது, மண்டபத்தின் உரிமையாளர்கள் இந்த நேரத்திற்கு விழா ஆரம்பித்து இந்த நேரத்தில் முடிவடைய வேண்டும் என்றும் தாங்கள் அதை கண்டிப்பாக கடைப்பிடிப்போம் என்று முன்எச்சரிப்பை வழங்கினார்கள் அதை அவர்கள் ஏற்றுக் கொண்டு மண்டப வாடகைக்குரிய பணத்தை செலுத்தினார்கள். இப்படியாக இந்த உலகத்திலுள்ள அதிகாரபூர்வமான சட்டங்களுக்கும் ஒழுங்கு முறைகளுக்கும் திருமணத்தின் பல மாதங்களுக்கு முன்னதாகவே தங்களை கீழ்ப்படுத்தி பணிந்து கொண்டார்கள். இப்போது திருமணம் செய்து கொள்ள சகல ஆயத்தங்களும் ஏற்பாடுகளும் செய்யப்பட்டாயிற்று. தற்போது அவர்கள் போட்டுக் கொண்ட திட்டத்தை தேவனாகிய கர்த்தர் ஆசீர்வதிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கின்றார்கள். பின்பு நாட்கள் சென்று தம்பதிகளுக்கிடையிலே வேற்றுமைகள் உண்டாகும் போதும், அதை தேவ வார்த்தையின்படி தங்கள் வேற்றுமைகளை மாற்றிக் கொள்ளாதபடிக்கு, தங்கள் விருப்பப்படியே திருமண ஒப்பந்தங்களை உடைத்துப் போடுகின்றார்கள். பிரியமானவர்களே, “அல்லேலூயா, கர்த்தருக்குப் பயந்து, அவருடைய கட்டளைகளில் மிகவும் பிரியமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான். அவன் சந்ததி பூமியில் பலத்திருக்கும், செம்மையானவர்களின் வம்சம் ஆசீர்வதிக்கப்படும்.” என்று தேவனுடைய வார்த்தை கூறுகின்றது. வீட்டைக் கட்டுகின்றவர்கள் முதலாவதாக உறுதியான அஸ்திபாரத்தை போடுகின்றார்கள். ஒருவன் தேவ ஆசீர்வாதத்தை வாஞ்சிக்கின்றவனாக இருந்தால், அவன் தன் வாழ்க்கைத் துணை யாரென்று தீர்மானம் செய்யும் முன்னதாகவே, வாழ்வின் அஸ்திபாரமாகிய தேவனுடைய கட்டளைகளின்படி அவன் தன் தீர்மானத்தை எடுத்துக் கொள்வான். அந்த வேளையிலேயே தேவனுடைய வாக்குத்தத்தத்தின் ஆசீர்வாதங்கள் யாவும் அவனுக்குரியதாக மாறுகின்றது.

**சங்கீதம் 112:1**

அல்லேலூயா, கர்த்தருக்குப் பயந்து, அவருடைய கட்டளைகளில் மிகவும் பிரியமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்.

**ஜெபம்**: ஆசீர்வதிக்கும் தேவனே, நான் என் வாழ்வில் சாபத்திற்குரியவைகளை தெரிந்து கொள்ளாதபடிக்கு, உம்முடைய வார்த்தைகளின்படி தீர்மானங்களை எடுக்க ஞானமுள்ள இருதயத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# நெருக்கப்படுகின்ற நேரங்களில்...

ஒரு ஊரிலே இருந்த குடியானவன் ஒருவன், ஊரிலுள்ள பெரிய பண்ணையொன்றிலே வேலை செய்யும்படி தினமும் சென்று வருவான். அங்கு வேலை செய்யும் வாலிபர்கள் இந்தக் குடியானவனை கேலி செய்வது வழக்கமாக இருந்தது. குடியானவனும் "தன்னுடைய கோபம் தன் குடும்பத்தை பட்டினியில் போட்டுவிடும்" என்று உணர்ந்த வனாய் அவர்கள் சொல்லும் நிந்தைகளையும் ஏளனமான வார்த்தைகளையும் பொருட்படுத்தாது, எல்லாவற்றையும் படைத்தவர் பார்த்துக் கொண்டிருக்கின்றார் என்று தனக்குள்ளே சொல்லிக் கொண்டு பொறுமையோடு தன் வேலைகளை செய்து வந்தான். இன்றும் வேலை செய்யும் இடங்களிலே நெருக்கங்கள் ஏற்படும் போது, மனிதர்கள் தீவிரமாகத் தீர்மானங்களை எடுத்துக் கொள்கின்றார்கள். ஒன்றில் வேலை செய்யும் இடம் தங்கள் விருப்பப்படி மாற்றப்பட வேண்டும் அல்லது இன்னுமொரு வேலையை பார்த்துக் கொள்ள வேண்டும் என்ற எண்ணமுள்ளவர்களாகவே இருக்கின்றார்கள். பிரியமானவர்களே, வேலைஸ்தலத்தில் மட்டுமல்ல, எந்த இடத்திலும், நெருக்கங்கள் ஏற்படும் போது நாம் தேவனுடைய கட்டளைகளை மறந்து விடக்கூடாது. 1. நான் சொல்வதும் செய்வதும் சரி என்னும் பெருமையுள்ள சிந்தையை என்னைவிட்டு அகற்றி, தேவனுடைய சமுகத்திலே என்னைத் தாழ்த்த வேண்டும். 2. நான் திருந்த வேண்டிய இடங்கள் உண்டா? என்று ஆராய்ந்து பார்த்து என் வழியை தேவனுக்கு பிரியமுள்ளதாக மாற்றிக் கொள்ள வேண்டும் 3. என்னுடைய கோபம் தேவ நீதியை நடப்பிக்காது மாறாக என்னுடைய வாழ்வின் சமாதானத்தை குலைத்துப் போடும் என்பதை அறிந்து கொள்ள வேண்டும். 4. தேவ நீதி என்னில் நிறைவேற இடங் கொடுக்க வேண்டும். 5. பின்பு நிதானமுள்ளவர்களாக தீர்மானங்களை எடுக்க வேண்டும். தேவன் பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கின்றார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கின்றார். கொடூரமானவர்களின் சீறல் மதிலை மோதியடிக்கிற பெருவெள்ளத்தைப்போல் இருக்கையில், தேவன் ஏழைக்குப் பெலனும், நெருக்கப்படுகிற எளியவனுக்குத் திடனும், பெருவெள்ளத்துக்குத் தப்பும் அடைக்கலமும், வெயிலுக்கு ஒதுங்கும் நிழலுமாயிருக்கின்றார். மூடர்கள் தங்கள் மதியீனத்திலே உங்களை ஒடுக்கும்போது, நீங்களும் மதியீனரைப்போல நடந்து கொள்ளாமல், தேவ நீதி நிறைவேறும்படி தேவ கட்டளைக்குள் அடங்கியிருங்கள்.

**சங்கீதம் 9:9**

**சிறுமைப்பட்டவனுக்குக் கர்த்தர் அடைக்கலமானவர் நெருக்கப்படுகிற காலங்களில் அவரே தஞ்சமானவர்.**

**ஜெபம்**: ஒடுக்கப்படுவோருக்கு அடைக்கலமான தேவனே, உலக நீதிக்கும், சுயநீதிக்கும் நான் அடிமையாகாதபடிக்கு, தேவ நீதி என் வாழ்வில் நிறைவேறும்படி உம் வார்த்தையில் நிலைத்திருக்க கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# என் கூப்பிடுதலை கேட்கும் தேவன்

சில வேளைகளிலே மனிதர்கள் அறிந்தோ அறியாமலோ தம்முடைய வாழ்வில் சுய விருப்பப்படி காரியங்களை செய்து விடுவதுண்டு. அதாவது சுய விருப்பதினால் தோல்வி ஏற்பட்டது என்பது பொருள் அல்ல. உதரணமாக, 1. ஒரு மனிதன் தன் இஷ்டப்படி வியாபாரத்தை ஆரம்பித்தான். அந்த வியாபாரம் நன்றாக வளர்ந்து அவனுக்கு பெரும் ஆதாயத்தை கொடுத்தது. அதிக நேரத்தை அவன் அதிலே செலுத்தி வந்ததால், அவன் தன் ஆன்மீக தேவைகளை மறந்து போனான். தன் மனக் கண்கள் இருளடைந்திருப்பதை அவன் உணராதவனாய் அழிவை நோக்கி ஓடிக் கொண்டிருக்கின்றான். உலகத்தின் பார்வையிலே அவன் வெற்றி பெற்றவனாக இருக்காலம். ஆனால் தேவனுடைய பார்வையிலே அவன் ஆத்துமா அழிவை நோக்கி ஓடிக்கொண்டிருக்கின்றது. அழிவை சந்திக்கும் வரைக்கும் அவன் தன் நிலையை அவன் உணராமல் வாழ்கின்றான். 2. இன்னுமொருவன் தன் இஷ்டப்படி ஆரம்பித்த வியாபாரம் பெரும் நஷ்டத்தை அவனுக்கு கொடுத்தது. என்ன செய்வது என்று தெரியாமல் அவன் மனம் தவித்துக் கொண்டிருக்கலாம். இப்படியாக மனிதர்கள் தேவனுக்கு சித்தமில்லாத: திருமணம், கல்வி, வேலை, வியாபாரம், நண்பர்கள், உறவுகள் போன்றவற்றில் சிக்கிக் கொண்டு வாழ்கின்றார்கள். இப்படியாக சூழ்நிலைகளிலே அகப்பட்டு இனி என்ன செய்வது என்று தெரியாது இருக்கின்றவர்கள் முதலாவதாக, இனி எடுக்கும் எந்த முடிவையும் தங்கள் இஷ்டப்படி செய்யாதபடிக்கு எச்சரிக்கையாக இருக்க வேண்டும். இருக்கும் நிலையிலே உங்கள் வாழ்க்கையை நியாயப்படுத்தாதபடிக்கு எந்த நிபந்தனையுமின்றி ஆண்டவர் இயேசுவிடம் உங்கள் வாழ்க்கையை ஒப்புக் கொடுங்கள். தீமைகளை நன்மையாக மாற்றுகின்ற கர்த்தர், மனந்திரும்புகின்ற எந்த ஆத்துமாவையும் புறம்பே தள்ளுவதில்லை. கர்த்தருக்காகப் பொறுமையுடன் காத்திருங்கள். அவர் உங்களிடமாய் சாய்ந்து, உங்கள் கூப்பிடுதலைக் கேட்பார். பயங்கரமான குழியிலும் உளையான சேற்றிலுமிருந்து உங்களைத் தூக்கியெடுத்து, உங்கள் கால்களைக் கன்மலையின்மேல் நிறுத்தி, உங்கள் அடிகளை உறுதிப்படுத்தி, நமது தேவனைத் துதிக்கும் புதுப்பாட்டை அவர் உங்கள் வாயிலே கொடுப்பார். ஒன்றுக்கும் உதவாதோர் என்று அவர் ஒருவரையும் தள்ளிவிட மாட்டார்.

**சங்கீதம் 40:1**

**கர்த்தருக்காகப் பொறுமையுடன் காத்திருந்தேன் அவர் என்னிடமாய்ச் சாய்ந்து, என் கூப்பிடுதலைக் கேட்டார்.**

**ஜெபம்:** இரக்கத்தில் ஐசுவரியமுள்ள தேவனே, உம்மை நம்பினோர் ஒருபோதும் வெட்கப்பட்டுப் போவதில்லை. என் சூழ்நிலையிலிருந்து நீர் என்னை விடுவிக்கும்படி நான் பொறுமையோடு காத்திருக்க பெலன் தாரும். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

| புதன் \| ஆவணி 25 | 📖 மாலை வாசகம் – சங்கீதம் 128:1 |
|---|---|

# வாழ்க்கையின் அஸ்திபாரம்

ஒரு ஐசுவரியமுள்ள மனிதனானவன், கடற்கரையொன்றிலிருந்து, சற்று நடை தூரத்திலே, ஒரு அழகான மாளிகையொன்றை கட்டினான். கட்டுமான பணிகள் யாவும் முடிந்த பின்பு, நாட்டின் சட்டப்படி, அந்தக் கட்டிடமானது பாதுகாப்பான முறையில் அமைக்கப்பட்டிக்கின்றது என்ற சான்றிதழை பெற்றுக் கொள்ளும்படிக்கு அந்தக் மாளிகையின் அமைப்பை சிபார்சு செய்யும்படி கட்டிட பொறியியலாளர் ஒருவர் அனுப்பப்பட்டார். அந்த கட்டிடத்தை சிபார்சு செய்த பொறியியலாளர், அந்த கட்டிடத்தின் அஸ்திபார வடிவமைப்பிலிருந்து பல குறைபாடுகள் இருப்பதாகவும், இந்தக் கட்டிடம் இந்த பிராந்தியத்தின்காலநிலைக்கு ஏற்றபடி அமைக்கப்படவில்லை என்றும் தெரிவித்தார். அதனால் அந்த அழகான மாளிகைக்கு பாதுகாப்பு சான்றிதழை வழங்குவதற்கு மறுப்பு தெரிவித்தார். பாருங்கள், அந்த ஐசுவரியமுள்ள மனிதன், கட்டிடத்தை கட்டும் முன்பும், கட்டிடம் கட்டப்படுகின்ற போதும் செய்ய வேண்டிய பாதுகாப்பு முன்ஏற்பாடுகளைச் செய்யாமல், எல்லாம் கட்டி முடிந்த பின்பு, சான்றிதழைப் பெற்றால் எல்லாம் சரியாகிவிடும் என்றிருந்தான். ஒருவேளை இந்த உலக ஐசுவரியத்தால் உலகிலே காரியங்களை நடப்பித்து முடிக்கலாம். ஆனால் நம்முடைய வாழ்க்கையானது தேவ வார்த்தையின்படி கட்டப்படாதவிடத்து, தேவ அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள முடியாது. இயேசு சொன்னார்: நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக் கேட்டு, இவைகளின்படி செய்கிறவன் எவனோ, அவனைக் கன்மலையின்மேல் தன் வீட்டைக் கட்டின புத்தியுள்ள மனுஷனுக்கு ஒப்பிடுவேன். அதாவது, தன் வாழ்விலே கடும் புயல் வந்தாலும் அவனுடைய வாழ்வு கர்த்தர் மேலே நிலைத்திருக்கும். நாம் விரும்பியபடி நம்முடைய வாழ்வை அமைத்துக் கொண்டு, பின்பு தேவனுடைய அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வேன் என்று ஒரு மனிதன் எண்ணுபவனாக இருந்தால், அவன் வாழ்வு கர்த்தர்மேல் நிலைத்திருக்காததால், சோதனையின் காலத்திலே விழுந்து போவான். எனவே, புத்தியுள்ள மனுஷனைப் போல, கர்த்தருடைய வார்த்தையின்படி உங்கள் வாழ்வாகிய வீட்டைக் கட்டுங்கள். கர்த்தரிலே நிலைத்திருப்பவன் ஒருபோதும் அசைக்கப்படுவதில்லை.

**மத்தேயு 7:24**

**நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக் கேட்டு, இவைகளின்படி செய்கிறவன் எவனோ, அவனைக் கன்மலையின்மேல் தன் வீட்டைக் கட்டின புத்தியுள்ள மனுஷனுக்கு ஒப்பிடுவேன்.**

**ஜெபம்**: நிலையான வாழ்வின் வழியைக் காண்பித்த தேவனே, உம்முடைய வழிகளை விட்டு விலகி இந்த உலகத்தின் வழிகளை நான் பின்பற்றி அழிந்து போகாதபடிக்கு என்னைக் காத்துக் கொள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# தேவ சித்தம் எங்கே?

ஒரு சிறு பிள்ளையானவன், பாடசாலையொன்றிலே முதலாம் ஆண்டில் சேர்த்துக் கொள்ளப்படும் போது, அவனுடைய பாட்டனார் அவனை நோக்கி: நீ வளர்ந்து வைத்தியனாக வரவேண்டும். அதுவே என் விருப்பம் என்று அவ்வப்போது கூறிக் கொண்டார். அவன் வளர்ந்து அதற்குரிய பாடங்களை கற்று வைத்தியத்துறை பட்டப்படிப்பிற்காக பல்கலைக் கழகத்திற்கு செல்ல ஆயத்தப்படும் போது, அவன் தகப்பனானவர் அவனை நோக்கி: மகனே, நீ அந்த குறிப்பிட்ட ஊரிலுள்ள பல்கலைக் கழகத்திலே படிப்பதையே நாங்கள் விரும்புகின்றோம் என்றார்கள். அதன்படிக்கு அவன் அந்த குறிப்பிட்ட பல்கலைக்கழகத்தில் படித்து வைத்தியனானான். அவன் தாயார் அவனை நோக்கி: நீ அயல் நாட்டிலுள்ள பிரபல்யமாக அந்த மருத்துவமனையில் வேலை பார்ப்பதையே நான் விரும்புகின்றேன் என்றாள். அவன் அந்த ஊருக்கு சென்று அங்கே வேலை பார்த்து வந்தான். தற்போது திருமணமாகும் நாட்கள் வந்ததும் அவன் தன் பெற்றோரை நோக்கி: நான் குறிப்பிட்ட பெண்ணையே திருமணம் செய்வதையே விரும்புகின்றேன் என்று கூறி குறிபிட்ட பெண்ணைதிருமணம் செய்து கொண்டான். குறிப்பிட்ட இந்த மனிதனுடைய வாழ்விலே அவனது சிறு பிரயாயத்திலிருந்து பிதாவாகிய தேவனுடைய சித்தம் எங்கே? தாய், தந்தையர், சகோதரர்கள், மனைவி, பிள்ளைகள் விருப்பங்களின்படி இந்த உலகிலே தேவனை அறியாத மனிதர்களும் தங்கள் வாழ்வின் குறிக்கோளை அடைவதற்கு அயராது உழைத்து அதை அடைந்து கொள்கின்றார்கள். அவர்கள் யாவரும் தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுகின்றார்களா? சற்று சிந்தித்துப் பாருங்கள். ஞாயிறு ஆராதனையில் இரண்டு மணி நேரங்கள் மட்டும் தேவனுடைய சித்தத்தைப்பற்றி பேசிவிட்டு, பின்பு வாழ்வின் முக்கிய நிகழ்வுகள் யாவற்றிலும் மனிதர்கள் தங்களது விருப்பங்களை நடத்துவது தேவ சித்தமாகுமா? நீங்களே கிறிஸ்துவின் சரீரமாயும், தனித்தனியே அவயவங்களாயுமிருக்கிறீர்கள். தேவன் ஊழியங்களை மட்டுமா வேறுபிரித்தார்? ஒவ்வொரு மனிதனும் தேவன் குறித்த இடத்தில் நிற்காமல் போகும் போது அங்கே குழப்பங்கள் உண்டாகும். கண் இருக்கும் இடத்தில் காது இருக்க முடியுமா? அல்லது கையிருக்கும் இடத்தில் கால் இருந்தால் என்ன? பிரியமானவர்களே, நம்முடைய வாழ்க்கை முழுவதும் நாம் தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றபடும் போது அங்கே பரிபூரண நிறைவு உண்டாகும்.

**1 கொரிந்தியர் 12:18**

தேவன் தமது சித்தத்தின் படி, அவயவங்கள் ஒவ்வொன்றையும் சரீரத்திலே வைத்தார்.

**ஜெபம்:** இரக்கமுள்ள பரம தகப்பனே, என்னை நீர் படைத்த நோக்கத்தை நான் இந்தப் பூமியிலே நிறைவேற்றி முடிக்கத் தக்கதாக ஞானமுள்ள இருதயத்தை எனக்கு தந்து என்னை வழிநடத்துவீராக. இட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# தீர்மானங்களின் அடிப்படைக் காரணி

நம்முடைய வாழ்க்கையிலே நாம் எடுக்கும் தீர்மானங்கள் யாவற்றிற்க்கும் பின்விளைவுகள் உண்டு. அது நன்மையான பலனையுடையதாக இருக்கலாம், அல்லது வாழ்வை பாதிக்கும் பின்விளைவுகளாக இருக்கலாம். நாம் ஒரு விதையை விதைக்கும் போது, அது முளைத்து, வளர்ந்து, அதன் பலனைக் கொடுப்பதற்கு பருவங்களும் காலங்களும் உண்டு. எனவே ஒருவன் எதை விதைக்கின்றான் என்பதைக் குறித்து கவனமுள்ளவனாக இருக்க வேண்டும். விதைப்பதற்கும் அறுப்பதற்கும் கால இடைவெளி இருப்பதால், சில வேளைகளிலே மனிதர்கள் அறுவடை செய்யும் காலம் வரும்போது தாங்கள் தங்கள் இஷ்டப்படி விதைத்தவைகளை மறந்து போய் விடுகின்றார்கள். அதாவது, நாம் இந்த உலகத்தின் போக்கில் நம்முடைய வாழ்வின் தீர்மானங்களை எடுத்தால், நாட்கள் கடந்து செல்லும் போது இந்த உலகத்திற்குரியவிளைச்சலையே பெற்றுக் கொள்வோம். நாம் தேவனுடைய வழிநடத்துதலின்படி தீர்மானங்களை எடுக்கும் போது, அங்கே அர்ப்பணிப்பும் கீழ்ப்படிதலும் உண்டு. அதனால் இந்த உலகத்திலே நன்மைகள் என்று கூறப்படுவைகளைக்கூட நாம் இழக்க நேரிடும்;ஆனால் அறுவடையின் நாள் வரும் போது அதன் முடிவு சமாதானத்தின் பலனை உண்டாக்கும். எனவே நீங்கள் எதை மையமாக வைத்து உங்கள் வாழ்வின் தீர்மானங்களை எடுத்துக் கொள்ளுகின்றீர்கள் என்பதைக் குறித்து நீங்கள் மிகவும் கருத்துள்ளவர்களாக இருக்க வேண்டும். இன்று இந்த உலகிலே பெரும்பான்மையான மனிதர்கள் பணத்தை மையமாக வைத்தே வாழ்வின் தீர்மானங்களை எடுத்துக் கொள்கின்றார்கள். அதை பெற்றுக் கொள்வதற்காக தங்கள் வாழ்வின் பல காரியங்களை மாற்றியமைப்பதற்கும், இழந்து போவதற்கும் ஆயத்தமாக இருக்கின்றார்கள். அதனால் விளைச்சல் வரும் போது எதை மையமாக வைத்தார்களோ, அதற்குரிய விளைச்சலையே அவர்கள் கண்டு கொள்வார்கள். நீங்கள் உங்கள் வாழ்வில் தீர்மானங்களை எடுக்கும்படிக்கு தேவ ஆலோசனையை நாடுங்கள். சில வேளைகளிலே தேவ ஆலோசனையானது உங்கள் எண்ணப்படி இருக்காது ஆனால் தேவ ஆலோசனையை மையமாக வைத்து தங்கள் முடிவுகளை எடுப்பவர்கள் பிதாவாகிய தேவனின் சித்தத்திற்கு தங்களை ஒப்புக் கொடுக்கின்றார்கள். முடிவிலே அதன் பலனாகிய நித்திய ஜீவனை அவர்கள் பெற்றுக் கொள்கின்றார்கள்.

**கலாத்தியர் 6:8**

**தன் மாம்சத்திற்கென்று விதைக்கிறவன் மாம்சத்தினால் அழிவை அறுப்பான் ஆவிக்கென்று விதைக்கிறவன் ஆவியினாலே நித்தியஜீவனை அறுப்பான்.**

**ஜெபம்**: என் தேவனாகிய கர்த்தாவே, நாட்கள் கொடியதாய் மாறிக் கொண்டிருக்கும் வேளையிலே, கிருபையின் நாட்களை நான் வீண்டிக்காதபடிக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# வினாவுள்ளவர்களாக இருங்கள்

நாம் சர்ப்பங்களைப் போல வினாவுள்ளவர்களாகவும் புறாக்களைப் போல கபடற்றவர்களாகவும் இருக்க வேண்டும். என்று ஆண்டவர் இயேசு கூறியிருக்கின்றார். இன்று சர்ப்பங்களைப் போல வினாவுள்ளவர்களாய் இருப்பதைக் குறித்து தியானிப்போம். அதாவது, இந்த உலகத்திலே, நம்முடைய பரம தரிசனமாகிய நித்திய ஜீவனை இழந்து போகும்படிக்கு, நம்மை நோக்கி வரும் ஆபத்துக்களைக் குறித்து எப்போதும் நாம் சர்ப்பத்தைப் போல விழிப்புள்ளவர்களாக இருந்து, தவறான தீர்மானங்களை எடுப்பதைத் தவிர்த்துக் கொள்ளவேண்டும். "ஏன்" நான் இதை செய்கின்றேன் என்று திரும்பத் திரும்ப கேட்பதினால், நான் எதை வாஞ்சிக்கின்றேன் என்பதை அறிந்து கொள்ளலாம். எடுத்துக்காட்டாக, ஒரு தகப்பனானவர்: "என் மகன் குறிப்பிட்ட அந்த பாடசாலையிலே படிக்க வேண்டும்" என்று திட்டமாக கூறினார். இப்போது அந்த தகப்பனானவர் தன் மனதிலிருப்பதை அறிந்து கொள்ளும்படி "ஏன் அல்லது எதற்காக" என்ற கேள்வியை திரும்பத் திரும்ப தன்னிடம் கேட்டுக் கொள்ள வேண்டும். 1. என் மகன் ஏன் அந்தக் குறிப்பிட்ட பாடசாலையில் தான் படிக்க வேண்டும்? பதில்: அங்கே பாடங்களை சிறப்பாக கற்பிக்கின்றார்கள். 2. ஏன் பாடங்களை சிறப்பாக படிக்க வேண்டும்? பதில்: சிறந்த புள்ளிகளுடன் பட்டம் பெற வேண்டும் 3: ஏன் பட்டம் பெற வேண்டும். பதில்: நல்ல உத்தியோகத்திலே அமர வேண்டும். 4: ஏன் நல்ல உத்தியோத்திலே அமர வேண்டும்? பதில்: கைநிறைய உழைத்து, இந்த உலகிலே சந்தோஷமாக வாழ வேண்டும். படிப்பதிலும் உழைப்பதிலும் தவறில்லை ஆனால் படிப்பும் உழைப்பும் மனிதனுக்கு மெய்யான சந்தோஷத்தை தர முடியுமா? புடிக்காதவர்கள் இந்த உலகத்திலே சந்தோஷமாக வாழ முடியாதா? பாடுகளும் உபத்திரவங்களும் வாழ்க்கையை சூழ்ந்து கொள்ளும் போது, படிப்பும் உழைப்பும் அதை தீர்த்து வைக்க முடியுமா? என்பதைக் குறித்து வேத வார்த்தைகளின் வெளிச்சத்திலே அந்த தகப்பனார் தன் நோக்கத்தை ஆராய்ந்து பார்க்க வேண்டும். ஆடுகள் ஓநாய்களுக்குள்ளே வாழ்வதைப் போல நாம் இந்த உலகத்திலே பொல்லாப்புகளின் மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். இந்த உலகிலே நாம் எடுத்துக் கொள்ளும் தீர்மானம் ஒவ்வொன்றும் நம்மை நித்திய ஜீவனுக்கு அல்லது நித்திய ஆக்கினைக்கு ஒருபடி கிட்டவாகக் கொண்டு செல்லும் என்பதை நாம் ஒருபோதும் மறந்துவிடக்கூடாது.

**மத்தேயு 10:16**

**சர்ப்பங்களைப்போல வினாவுள்ளவர்களும் புறாக்களைப்போலக் கபடற்றவர்களுமாய் இருங்கள்.**

**ஜெபம்**: பரலோக தேவனே, இந்த உலகத்தினால் உண்டாகும் கேட்டிற்கு தப்பித்துக் கொள்ளும்படிக்கு நான் அவைகளைக் குறித்து வினாவுள்ளவனா(ளா)க இருக்க பிரகாசமுள்ள மனக் கண்களை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# நீ ஏன் அழைக்கப்பட்டாய்?

சபைகளிலே குழப்பங்கள், பட்டணங்களிலே குழப்பங்கள், தேசத்திலே குழப்பங்கள், குடும்பங்களிலே குழப்பங்கள் என்று ஒரு வாலிபன் குழப்பமடைந்தான். நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள், நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள். மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது என்று ஆண்டவராகிய இயேசு கூறியிருக்கின்றார். கிறிஸ்தவர்கள் என்ற நாமத்தை தரித்தவர்கள் தங்கள் முன்மாதிரியான வாழ்க்கையை விட்டு விலகும் போது குடும்பத்தில், சபையில், பட்டணத்தில், தேசத்தில், உலகத்தில் பாதிப்புக்கள் உண்டாகின்றது. அதனால் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து கூறிய வார்த்தைகள் அவமாகப் போய்விடுவதில்லை. நித்திய ஜீவன் இல்லாமற் போய்விடுவதில்லை. பரலோகம் பாதிக்கப்படுவதில்லை. "இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: ஒருவனும் உங்களை வஞ்சியாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள். ஏனெனில், அநேகர் வந்து, என் நாமத்தைத் தரித்துக்கொண்டு: நானே கிறிஸ்து என்று சொல்லி, அநேகரை வஞ்சிப்பார்கள்." என்று நம் கர்த்தராகிய இயேசு நமக்கு எச்சரிப்பை முன்கூட்டியே எழுதிக் கொடுத்திருக்கின்றார். எனவே உங்களைச் சூழ நடக்கும் துரோகங்களையும், மறுதலிப்புக்களையும், மாய்மாலங்களையும் கண்டு பின்வாங்கிப் போய்விடாதிருங்கள். நீங்கள் ஏன் அழைக்கப்பட்டீர்கள்? மற்றவர்ளுடைய முன்மாதிரியற்ற வாழ்க்கையின் நிமித்தம் குழப்பமடைவதற்காகவா? சிலர் இந்த உலகத்திற்கு பின்னாலே இழுப்புண்டு போனபோது, தேவ ஊழியராகிய பவுல் இதைக் குறித்து தீமோத்தேயு என்னும் இளம் ஊழியருக்கு கூறியதாவது. நீயோ, தேவனுடைய மனுஷனே, இவைகளை விட்டோடி நீதியையும் தேவபக்தியையும் விசுவாசத்தையும் அன்பையும் பொறுமையையும் சாந்தகுணத்தையும் அடையும்படி நாடு. விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராடு, நித்தியஜீவனைப் பற்றிக்கொள் அதற்கா கவே நீ அழைக்கப்பட்டாய் அநேக சாட்சிகளுக்கு முன்பாக நல்ல அறிக்கை பண்ணினவனுமாயிருக்கிறாய். நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து பிரசன்னமாகும்வரைக்கும், நீ இந்தக் கற்பனையை மாசில்லாமலும் குற்றமில்லாமலும் கைக்கொள்ளு" என்றார். எனவே உங்கள் அழைப்பை மறந்து போகாமல் உறுதியோடு முன்னேறுங்கள். அழைத்தவர் உண்மையுள்ளவராக இருக்கின்றார்.

**1 தீமோத்தேயு 6:12**

நித்தியஜீவனைப் பற்றிக் கொள் அதற்காகவே நீ அழைக்கப்பட்டாய்

**ஜெபம்**: உண்மையுள்ள தேவனே, இந்த உலகத்திலே நடக்கும் வஞ்சகங்களையும், குழப்பங்களையும் கண்டு நான் என் தூய வாழ்க்கையை குழப்பிவிடாமல், நித்திய ஜீவனை பெற்றுக் கொள்ளும்படி முன்னேற கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# பொல்லாப்புக்கு விலக்கிக் காத்தருளும்

ஒரு ஊரிலே மிகவும் பலசாலியான மனிதனொருவன் இருந்தான். அந்த ஊர் வழியாக சென்று கொண்டிருந்த வழிப்போக்கன் ஒருவனுக்கும் அவனுக்கும் கருத்து முரண்பாடு ஏற்பட்டதால், முற்கோபியாகிய வழிப்போக்கன் அந்த மனிதனுடைய கன்னத்திலே அறைந்து விட்டான். மிகவும் கோபமடைந்த பலசாலியாகிய அந்த மனிதன், அந்த வழிப்போக்கனுக்கு ஒரு பாடம் கற்பிப்பேன் என்று கூறிக் கொண்டு அவனை அடிக்கும்படியாக சென்றபோது, அந்த பலசாலியின் நண்பர்கள் சென்று அவனை சண்டைக்கு செல்ல வேண்டாம் என்று வருந்திக் கேட்டுக் கொண்டு அவனைத் தடுத்து நிறுத்தினார்கள். அதனால், அன்று நடக்க இருந்த பொல்லாப்பு அந்த பலசாலியின் தலையின் மேல் வராமல் தடுத்து நிறுத்தப்பட்டது. அந்த பலசாலியின் மூர்க்கமாகிய மாம்ச குணமானது நண்பர்களின் நட்பினால் மேற்கொள்ளப்பட்டது. அன்று அந்த பலசாலி தன் நண்பர்கள் தன்னை தடுத்து நிறுத்தியதைக் குறித்து திருப்தியற்றவனாக இருந்தான் ஆனால் பல ஆண்டுகள் சென்ற பின்பு, அன்றைய தினத்தினாலே அந்த வழிப்போக்கனுக்கு நான் பாடம் படிப்பிக்க முயன்றிருந்தால், அவன் அல்ல நானே ஒரு கசப்பான பாடத்தை என் வாழ்விலே கற்றிருப்பேன். அதனால் நானும், என் குடும்பமும், என்னைச் சார்ந்தவர்களும், வழிப்போக்கனை சார்ந்தவர்களின் வாழ்க்கையும் பெரிதாக பாதிக்கப்பட்டிருக்கும் என்று தெளிவாக உணர்ந்து கொண்டான். இப்படியாகவே, மனிதர்களுடைய வாழ்க்கையிலே எதிர்பாராத சூழ்நிலைகளிலே மாம்ச இச்சைகள் நிறைவேற்ற வேண்டும் என்னும் ஆசைகளும், உலக காரியங்களைக் குறித்த கவலைகளும் மனதிலே உண்டாகின்றது. அந்த சூழ்நிலையிலே அவற்றை எப்படியாவது நிறைவேற்ற வேண்டும் என்ற எண்ணமே கண்களின் முன்பாக இருக்கும். அந்த வேளைகளிலே தேவனுடைய வார்த்தை, தேவனுக்கு பயப்படும் நண்பர்கள், தேவனுக்கு பயப்படும் சகவிசுவாசிகள், ஊழியரின் ஆலோசனைகள், வழிநடத்துதல், நம்முடைய மனக்கண்களை பிரகாசமுடையச் செய்யும். நாங்கள் சென்று கொண்டிருக்கும் பாதையிலே அது வெளிச்சத்தை வீசுவதால், அங்கே நம்மை காத்திருக்கும் பொல்லாப்புக்களை நாம் கண்டு அவற்றிலிருந்து விலகிக் கொள்ளலாம். கர்த்தருக்குப் பயப்படுதல் ஜீவஊற்று அதினால் நாம் மரணக் கண்ணிகளுக்குத் தப்பலாம்.

**சங்கீதம் 119:92**

**உம்முடைய வசனத்தை நான் காத்து நடக்கும்படிக்கு, சகல பொல்லாத வழிகளுக்கும் என் கால்களை விலக்குகிறேன்.**

**ஜெபம்:** பொல்லாப்புக்கு விலக்கிக் காக்கும் தேவனே, உமக்குப் பயந்து உம்முடைய வழியில் நடப்பவர்களின் ஊடாக உமது ஆலோசனைகளை குறித்த சமயத்தில் நீர் தந்து என்னை காத்து வருவதற்காக உமக்கு நன்றி. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# அன்பு பெலன் தெளிந்த புத்தி

மனந்திரும்புதல், மறுரூபமடைதல், தேவ சாயலிலே வளருதல், உள்ளான மனிதன புதிதாக்கப்படுதல், தேவ சித்தத்தை நிறைவேற்றுதல் என்ற வார்த்தைகளை திரும்பத் திரும்ப கேட்பதால் சலிப்படைந்து போய்விடாதிருங்கள். "எனக்கிருக்கும் பிரச்சனைகள் போதும், இவைகளை சிந்திக்க நேரமில்லை" என்று சிலர் கூறிக் கொள்வதுண்டு. பிரச்சனைகள் சூழ்ந்து கொள்ளும் போதே நாம் இவைகளை அதிகமாக சிந்திக்க வேண்டும். எல்லாச் சூழ்நிலைகளிலும் பிதாவாகிய தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுவதே நம்முடைய நோக்கமாக இருக்க வேண்டும். வாழ்வில் புயல் சூழந்து கொள்ளும் போது, அதை என்னுடைய தீர்மானத்தின்படி நான் மேற்கொள்ளுவேன் என்று இருக்கும் மனிதர்கள் தங்கள் சுயபுத்தியின்மேல் சார்ந்து கொள்கின்றார்கள். அதனால் இன்னும் அதிக நோவுகளை தங்கள் வாழ்வில் வருவித்துக் கொள்கின்றார்கள். எனவே மனந்திரும்புதல், மறுரூபமடைதல், தேவ சாயலிலே வளருதல், உள்ளான மனிதன் புதிதாக்கப்படுதல், தேவ சித்தத்தை நிறைவேற்றுதல் என்பது நம் வாழ்வில் நம்முடைய விருப்பப்படி செய்யலாம் அல்லது விரும்பாத வேளைகளிலே விட்டுவிடலாம் என்று கூற முடியாது. இவைகளை நாம் செய்வதற்கு, நம்முடைய துன்ப துயர நேரங்களில் தேவன் நம்மை தனிமையில் தவிக்க விட்டுவிடுவதில்லை. நம்முடைய கால்கள் சறுக்கும் வேளைகளிலே அவர் நமக்கு துணையாக வருகின்றார். நம் வாழ்விலே வரும் பயங்கரங்களையும், துன்பங்களையும் கண்டு பயந்து நடங்கி, ஒடுங்கிப் போகும்படிக்கு நாம் பயமுள்ள ஆவியை பெறவில்லையே. தேவன் நமக்குப் பயமுள்ள ஆவியைக் கொடாமல், பலமும் அன்பும் தெளிந்த புத்தியுமுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார். நம்முடைய பலவீனங்கள் என்னவென்று நம் ஆண்டவராகிய இயேசு அறிந்திருக்கின்றார். அவர் இந்த உலகத்திலே இருந்த நாட்களிலே எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டார் ஆனாலும் அவர் பாவம் செய்யாமல், எல்லாச் சோதனைகளையும் மேற்கொண்டு வெற்றி சிறந்தார். அவரே நம்முடைய பிரதான ஆசாரியராக இருப்பதால், நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யுங்கிருபையை அடையவும், தைரியமாய்க் கிருபாசனத்தண்டையிலே சேரக்கடவோம்.

**2 தீமோத்தேயு 1:7**

தேவன் நமக்குப் பயமுள்ள ஆவியைக் கொடாமல், பலமும் அன்பும் தெளிந்த புத்தியுமுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார்.

**ஜெபம்**: முடிவில்லாத வாழ்வை தருவேன் என்ற தேவனே, இந்த உலகத்திலே நெருக்கங்கள் ஏற்படும் போது நீர் என்னோடு இருந்து அவைகள் மத்தியிலும் உம்முடைய சித்தத்தை நிறைவேற்ற கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# அன்பான வாசகர்களுக்கு!

## உங்கள் **‘உள்ளான மனிதன்’** பிரதியை பெற்றுக் கொள்ளுங்கள்

உள்ளான மனிதன் சஞ்சிகையை ஒரு சபையினூடாக பெற் றிருந்தால், தொடர்ந்தும் மாதாந்தர பிரதியை பெற்றுக்கொ ள்ள, அந்த சபையின் போதகரை தொடர்பு கொள்ளுங்கள். நீங்கள் வசிக்கும் இடத்தில் உள்ள சபையின் ஊடாக உள் ளான மனிதன் சஞ்சிகை விநியோகிக்கப்படாவிடில், அடுத்த பக்கத்திலுள்ள படிவத்தில் உங்கள் விபரங்களை பதிவு செய்து, அடுத்த பக்கத்திலுள்ள விண்ணப்பப்படிவத்தில் உங் -கள் விபரங்களை பதிவு செய்து, எங்கள் முகவரிக்கு அனுப் பிவையுங்கள்.

மாதம் இந்த சஞ்சிகையை வாசித்த பின்பு மற்றய சகோதர சகோதரிகளுடனும் இதனை பகிர்ந்து கொள்ளுங்கள். இரட் சிப்பு தேவனிடத்திலிருந்து வரும்!

**தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக் கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வள வாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்**. (யோவான் 3:16)

அந்த ஆச்சரியமான மாறாத தேவ அன்பு இன்றும் யாவரை யும் இருளின் அதிகாரத்திலிருந்து ஆச்சரியமான தேவ ஒளிக்குள் வரும்படியாய் அழைக்கின்றது. ஆமென்!

**கிருபையின் கூடாரம் அப்போஸ்தல சபை**

**ரொரன்ரோ, கனடா ☎ 416.613.2909 gtachurch.ca**

உள்ளான மனிதன் மாதாந்த இலவச பிரதி

# விண்ணப்பப் படிவம்

**முழுப் பெயர் FULL NAME:**

______________________________

______________________________

**முகவரி ADDRESS:**

(தபால் உங்கள் இருப்பிடத்திற்கு வந்தடைய தேவையான முழு முகவரி விபவரங்களையும் குறிப்பிடவும்)

______________________________

______________________________

______________________________

## மேலதிக விபரங்கள்

☐ **whatsApp** வாயிலாக தியான குறிப்புகளை பெற விரும்புகின்றேன்

☐ **Viber** வாயிலாக தியான குறிப்புகளை பெற விரும்புகின்றேன்

(**whatsApp Viber** வாயிலாக பெற விரும்பினால் உங்கள் கை தொலைபேசி இலக்கத்தைக் கீழே குறிப்பிடவும்)

**கை தொலைபேசி MOBILE PHONE:** ______________________________

**மின் அஞ்சல் E-MAIL:**

______________________________

**விண்ணப்பப் படிவம் அனுப்பப்பட வேண்டிய முகவரி**

**THE INNER MAN – GTAC**
**7700 MARKHAM ROAD**
**P. O. BOX 3052,**
**MARKHAM, ON L3S 4T1 - CANADA**

MAIL THE APPLICATION FORM TO THE ABOVE-MENTIONED ADDRESS